www.padippakam.com

# சிரித்திரன்




பங்குனி, வைகாசி - 1992

படிப்பகம்

www.padippakam.com


# டிஸ்னி மினி கூல் பார்

## வாடிக்கையாளர்களுக்கு
## எமது ஸ்தாபனத்தின் புதிய சேவை

● ஐஸ்கிறீம் ● கோண் ஐஸ் கிறீம் ● ஐஸ் பழம் ● ஐஸ் சர்பத்

● புறூட் சலட் ● நெல்லி ரசம் ● யானை மார்க் குளிர்பானங்கள்

மற்றும்

● வடை ● லட்டு ● றோல்ஸ் ● சமோசா ● சூசியம் ● மிக்சர்

● மைசூர்பாகு ● பருப்பு வகைகள்

மற்றும்

சுவைமிகு சிற்றுண்டி வகைகள்

சுவையான தேனீர், கோப்பி வகையறாக்களும்

எம்மிடம் கிடைக்கும்

அத்துடன்

விசேட வைபவங்களுக்கான சிற்றுண்டி உணவு வகைகளும்

ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

மதிய உணவுக்கு முன்கூட்டிய ஓடர்களுக்கு



# DISNEY MINI COOL BAR

70, RUE LOUIS BLANC,
75010 - PARIS.
Metro: La CHAPELLE
Tel: (1) 40 36 16 23
Fax: (1) 40 36 16 32



படிப்பகம்

www.padippakam.com

சிரித்திரன்
செய்தொழில் தெய்வம் சிரிப்பே சிகரம்

நகை 31 ■ பங்குனி - வைகாசி 1992 ■ சுவை 2

# முன் முறுவல்



**சரசுவதி:**
"எங்களுக்கும் 'ஷெல்' அடிப்பவங்களுக்கும் மோட்சம் தான்.
**கனகம்:**
"என்ன!?!?"
**சரசுவதி:**
"எங்களுக்கும் நித்திரையில்லை; அவங்களுக்கும் நித்திரையில்லை; ஒரே சிவராத்திரிதான்!"


● ● ●



"வீடு பூட்டியிருக்கு; அந்நியநாடு போயிட்டினமோ?"
"உள்ளே தான் இருக்கினம்; விடிய விடிய வீடியோ பார்த்து நித்திரை."

● ● ●

"டொக்ரர் என் மனைவிக்கு கண்ணீர் வடியுது!"
"என்னவேனும் கண்ணுக்குள் விழுந்ததா?"
"மகனின் கடிதம் கனகாலத்திற்குப் பின் வந்தது; திருப்பித் திருப்பி வாசித்ததில் இப்படியாப் போச்சு!"



"ஏன் கலியாணத்துக்கு கையொப்பமிட யோசிக்கிறீர்?"
"சீதனச் 'செக்' மாறினபின்பு கையொப்பமிடுறன்."

● ● ●

"எங்கள் பட்டாசுத் தொழிற்சாலைக்கு சிப்பாய்களையும் எடுப்போம்."
"ஏன்?"
"நாங்கள் கையால் எறிகிற எறிவெடியைத்தான் அவங்கள் மெஷினால் எறியினம்!"

● ● ●



**முருகேசர்:**
சிவராத்திரி எப்பிடி முழித்தீர்?
**அழகேசர்:**
அரசாங்கம் தடை செய்த பட்டியலை நினைக்க நித்திரை வரவேயில்லை.

● ● ●

**தாய் நுளம்பு:**
ஏன் அவரைக் கடிக்கவில்லை?
**பிள்ளை நுளம்பு:**
அவரையா... அவர் பயந்தாங்கொள்ளி தாண்டிக்குளத்தை தாண்டி ஓடியவர்.



படிப்பகம்

www.padippakam.com

# மகுடி

## கேள்வி - பதில்கள்



**செல்வன். இளையராஜா - இணுவில்.**
■ மகுடியாரே, தற்போது உம்மில் மாற்றம் தெரிகிறதே........?
● இன்றைய நிலையின் நிலக்கண்ணாடி.

**செல்வன். கண்ணன் அழகர் - வரணி.**
■ உமது பத்திரிகையில் யுத்த வாடை வீசுகிறதே?
● குருதி வாடையைக் குங்கிலிய வாடை என்றா கூற முடியும்?

**ப. கருணாகரன் - சுழிபுரம்.**
■ விமானத்தைப் பற்றிய உமது கருத்தென்ன?
● தூரத்தையும் நேரத்தையும் குறுகத் தறித்த விஞ்ஞானம்.

**செல்வன். குமரேஸ் பீதாம்பரம் - நவிண்டில்**
■ எவன் தன்மானம் உள்ளவன்?
● "பிறர் முதுகு சொறிந்து வாழ்வதிலும் தன் முதுகில் மூட்டை சுமந்து வாழ்வதே மேலானது" என எண்ணுபவன்.

**செல்வி. சந்திரிகா - சண்டிலிப்பாய்**
■ இன்றைய விடுதலைப் போர் பற்றி உமது கருத்து?
● புறநானூற்றிலிருந்து புறப்பட்ட புயல்.

**செல்வன் சுதாகரன் - சுதுமலை தெற்கு.**
■ வாயில் வந்தபடி நாக்குப் பேசலாமா?
● நாக்கிற்கும் மனச்சாட்சி நாணயம் பிடிக்க வேண்டும்.

**க. அனுஷ்யா - கொக்குவில்.**
■ பிறக்கிறோம்; இறக்கிறோம் - என்னத்தைக் கண்டோம்? என்னத்தைக் காண்பதில்லை?
● வாக்குச் சீட்டைக் கண்டோம்; வளமான வாழ்க்கையைக் காணவில்லை!

**இ. தவமோகன் - கொக்குவில் இந்துக்கல் லூரி.**
■ பொறாமை என்பது என்ன?
● எட்டப்பன் மைக்கூடு.

**செல்வி. யாழினி ரகுநாதன் - கொக்குவில்.**
■ கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?
● மின்னொளியில் குதூகலிக்கின்றது கொழும்பு. மின்மினி ஒளியில் சாதனை புரிகின்றது யாழ்ப்பாணம்!

**செல்வன் ரமணன் நந்தகோபால் - தலையாழி**
■ கல்விச்செல்வம் பற்றி சிறிது கூறுங்கள்?
● கல்வி கல்விமான்களை உருவாக்கியதல்லாமல் மனிதனை உருவாக்கவில்லை.

■ இன்றைய இலக்கியம் எங்கே போகின்றது?
● தந்தக்கோபுர தரிசனமல்ல; நிதர்சனம்!

**செல்வன். குரு தாமோதரம் - நல்லூர்.**
■ உன் ஆண்டவன் யார்?
● அடுத்தவன் முகத்தில் தாண்டவமாடும் ஆனந்தமே என் ஆண்டவன்.

**நாகமணி மகேந்திரலிங்கம் - சங்கானை.**
■ மாறிவரும் விஞ்ஞான உலகில் இலங்கை சாதித்தது என்ன?
● ஒவ்வொரு தமிழனும் ஐன்ஸ்டீனாக மாறிக்கொண்டிருக்கிறானே!

**செல்வி. மலர் - கொக்குவில் மேற்கு.**
■ கலப்படம் செய்வோர் பற்றி உமது கருத்து?
● உடலை நச்சுத்திரவம் ஊற்றும் போத்தல் என நினைக்கிறார்கள்!

**செல்வன் குமார்வடிவேல் - நீர்வேலி.**
■ பத்திரிகை எப்படி இருக்கவேண்டும்?
● அபயச் சங்காக இருக்கவேண்டும் - அபாயச் சங்காக இருக்கக் கூடாது?

**செல்வன். சிவஞானம் விக்கினேஸ்வரன் - நாதன் வீதி, இணுவில்.**
■ வாழ்க்கை என்பது சிலசமயம் வழுக்கிவிடுகிறதே?



படிப்பகம்

www.padippakam.com

● தூங்காத மீன்கூட தூண்டிலில் விழுகிறதே!

இராமநாதன் மனோகரநாதன் -
நெட்டிலிப் பாய், கோண்டாவில் மேற்கு.

■ இயற்கைகூட எம்முடன் மல்லுக்கட்டுகிறதே?
■ இந்தக் கோடை வெய்யில் பற்றி என்ன கருதுகிறீர்கள்?
● தித்திக்கும் கறுத்தக்கொழும்பான் கோடையின் கொடையல்லவா.

செல்வன். தர்மலிங்கம் விபுலானந்தன் -
கோண்டாவில் மேற்கு.

■ எண்ணெய் இல்லாத நாட்டில் பண்ணை விளையுமா? என்ன இல்லாவிட்டாலும் இங்கு எல்லாம்
● விளையும்.

செல்வன் மகேஷ் சின்னையா - மாவிட்டபுரம்.

■ மங்கையரை மகிழவைப்பது என்ன?
● "ஆண்கள் அர்த்தநாரீஸ்வரரின் அர்த்தத்தைப் புரிந்துவிட்டார்கள்" என்று அறியவருவது.

செல்வன் மகேந்திரலிங்கம் - வேலணை.

■ பொறாமையில்லாது வாழ்வது எப்படி?
● தாழ்வுச்சிக்கலை அகற்றவேண்டும்; தன்னம்பிக்கையை வளர்க்கவேண்டும்.

செல்வன். ஞானேஸ்வரன் கந்தையா - உடுவில்.

■ விடுதலைப் போராளிக்கும் அரசியல்வாதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
● விடுதலைப் போராளிக்கு நாட்டின் தலையெழுத்தை மாற்றி எழுதத் தெரியும்; அரசியல்வாதிக்குத் தரியாது.

ஆர். ஜெயக்குமார் - மே/பா,
குலேந்திரபதி. உரும்பிராய்.

■ மனச்சாட்சி என்பது எப்படிப்பட்டது?
● எல்லோருடைய மனச்சாட்சிகளும் ஒரே அச்சின் வார்புகள் அல்ல; கணவனின் மனச்சாட்சி பணப்பையில் - மனைவியின் மனச்சாட்சி டம்பப்பையில்!

செல்வன் மணிசேகரன் - வரணி.

■ வாழ்க்கை வினோதமானது என்கிறேன்?
● உண்மைதான் - ஒருவன் உயிர்துறந்து முத்துக்குளிக்கிறான், இன்னொருவன் முத்தைத் துறந்து துறவியாகிறான்.

செல்வன். மணிமாறன் சின்னையா - தும்பளை.

■ புத்தகமில்லா வீடு. . ?
● அகமில்லா வீடு!

செல்வன் உதயசூரியன் - விலைமதிப்பீட்டுத் திணைக்களம், கன்னாதிட்டி - யாழ்.

■ தற்போதைய சூழ்நிலையில் அரச ஊழியர்களின் நிலையை எப்படி மதிப்பிடுகிறீர்கள்?
● சிங்கள ஊழியர் வாயில் தங்கக்கரண்டி; தமிழ் ஊழியர் வாயில் பித்தளைக் கரண்டி!

■ ■ ■

## மகளிர் மிதிவண்டி

ஏறி, இறங்கி, இறங்கி, ஏறி... சலித்துப் போயிற்று! இன்னும் எத்தனை கடைகள் தான் தடவுவது? அவனிற்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

"ச்சாய்... இந்தப் பெண்டுகள் எல்லாம் சைக்கில் ஓட வெளிக்கிட்டுத்தான் இந்த விலை - கிராக்கி!" கூடவந்த நண்பனிற்கு திகைப்பாய்ப் போயிற்று; கேட்டான்: "நீ ஆருக்கு வாங்கப்போறாய்?" - அவன்: "தங்கச்சிக்கு."

மையோன்

※ இக் குறியிடப்பட்டுள்ள கேள்வி சிறந்ததெனத் தேர்வு பெற்று மில்க்வைற் அதிபரினால் வழங்கப்படும் ரூபா 50/-ஐப் பரிசாகப் பெறுகிறது.

வாசகர்களே!

உங்களது சந்தேகங்களைத் தீர்த்து வைக்க முனைகிறார் மகுடியார். தவிர, ஒவ்வொரு இதழிலும் இடம்பெறும் சிறந்த கேள்வி ஒன்றிற்கு பரிசுப்பணமாக ரூபா 50/- மில்க்வைற் அதிபரினால் வழங்கப்படுகிறது. உங்கள் கேள்விகளை உடனே அனுப்பி வையுங்கள்.

மகுடி பதில்கள்
சிரித்திரன்,
550, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

- ஆசிரியர் -



படிப்பகம்

www.padippakam.com

# "பட்டணந்தான் போகலாமடி"

• சிவா பொன்னுத்துரை •



உச்சி வெயில் மண்டையைப் பிளக்குது! என்ன செய்யிறது? அதப்பாத்தா முடியுமே? இப்பிடியே வெளிக்கிட்டால்தான் பையப் பைய போய்ச் சேரலாம்; ஆறுமணிக்குப் பிறகு பெரியாஸ்பத்திரிக்குள்ள விடமாட்டாங்கள்!"

"நாங்கள் எங்கை? பட்டணம் எங்கை? ம்ம்.... எங்கடை நிலமை இப்பிடியாப் போச்சு! வருத்தமாக் கிடக்கிறவனைப் பார்க்கப் போறதுக்கே அந்தக் காலத்தில கதிர்காம யாத்திரை வெளிக்கிட்ட மாதிரிப் போகவேண்டிக் கிடக்கு!"

■ ■ ■

"பொறு...... பொறு.... வாய்வுக் கோளாறு வல்லிபுரத்தார் வாறார் போல கிடக்கு!"

"அதார் அது?"

"பங்க பார், பறபறவெண்டு விட்டுத் தள்ளிக் கொண்டு வானத்தில வட்டம் போடுறார்!"

"எட.... கெலியப்பர்!"

"ம்.... கெலியப்பர்..... நர.... பலியப்பர்...... கோட்டை முனியப்பர் இவரிட்டயும் தவறேலாமல் போச்சு!"

■ ■ ■

"இ. போ. ச. பேருந்துச்சேவைதான் போச்சு; பத்தாதெண்டு எரிபொருளையுந் தடை பண்ணினாங்கள்; சிற்றூர்திச் சேவையும் போச்சு! உந்த வானூர்திச் சேவையை மட்டும் ஒழுங்கா நடத்துறாங்கள்!"

■ ■ ■

"ஒருக்கால் மறிச்சுக் கேளும், பட்டணத்தில கொண்டு விடுவியளோ எண்டு!"

"ம்ம்.... கேளுங்கோ!.... உது பட்டணத்தில கொண்டு விடுற வாகனமில்லக் கண்டியளோ; பரலோகத்தில கொண்டு விடுற வாகனம்! உந்த வாகனத்தை ஓடுறவையையுந்தான்!"

■ ■ ■

"கேட்டியே!...... அந்தக் காலத்தில உவங்கள் இலங்கைய ஆளத் தகுந்தது இடதுசாரி அரசியலோ வலதுசாரி அரசியலோ எண்டு இழுபறிப்பட்டாங்கள்; ஒருத்தனுக்கும் தமிழனப் பற்றி கவலயில்ல. இப்ப பாத்தியே, ரண்டு சாரியளுமாச் சேந்து நிண்டு தமிழரப் பாத்துச் சொல்லாமல் சொல்லுறாங்கள்; 'நீங்கள் இடதுசாரியாவும் இருக்க வேண்டாம் வலதுசாரியாவும் இருக்கவேண்டாம். பாதசாரியா இருங்கோ' எண்டு!"

■ ■ ■

"சரி..... சரி.... உவன் உங்கேயே சுழண்டுகொண்டு நிப்பான்; பார்த்துக்கொண்டு நிண்டா நாங்களும் இதுக்கையே சுழர வேண்டியதுதான்; சுறுக்கா நடவுங்கோ!"

"பொறன், ஏதாவது துண்டுப் பிரசுரம் போடுவான்; பாத்திட்டுப்போவம்."

"ஓமோம், அவன் துண்டு போடுவான்.... வெளியுலகத்துக்குக் காட்ட கற்கண்டும் போடுவான்..... பொறுக்கப் போனா குண்டு போடுவான்! விட்டிட்டு நடவுங்கோ!"

■ ■ ■



படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியப் பண்பூ மலரட்டும்




ஆசிரியன் ஓர் சமூகச் சிற்பி. சமூகத்தின் உயர்வு தாழ்வு அவனைச் சார்ந்தது. அவன் கடமையைச் செய்தால் சமூகம் உயரும்; தவறினால் தாழும்.

அவன் உருவாக்கும் ஒவ்வொரு மாணவனும் சமூகமாளிகையை எழ வைக்கும் செங்கல்: செங்கல் செம்மையாக இருக்கவேண்டும். இல்லையெனில் சமூகமாளிகை சாயும்.

பள்ளிக்கூடம் மாணவர்களுக்கு பள்ளிகொள்ளும் கூடமல்ல. ஆசிரியர்களுக்கு அது கூடிப்பேசும் மடமுமல்ல. ஆசிரியர்கள் அறிவுக்கனி வழங்கவேண்டும். மாணவர்கள் அதில் திளைக்கவேண்டும், தளைக்கவேண்டும்;

யாழ்ப்பாணம் கல்லூரிகளும் தனியார் கல்வி நிறுவனங்களும் நிறைந்த பூமி. ஏன், கல்விமான்கள் மேய்கின்ற பூமி என்றே கூறலாம். அவர்கள் புத்தகப் பக்கங்களை மேய்ந்துகொண்டிருக்கிறார்கள். நாட்டின் உயர்வுக்கு ஏணியாக இருக்கவில்லை.

யாழ்ப்பாண மக்கள் விவசாயத்தையும் கல்வியையும் தமது இரு கண்களாகக் கருதி வந்தார்கள். வர்த்தக மோகம் கொண்ட ஆங்கிலேயன் எமது மண்ணில் காலடி வைத்தான். கலப்பை ஓட்டிகள் பேனா ஓட்டிகளாக மாறினார்கள். வர்த்தகம் வளர்ந்தது. விவசாயம் வறண்டது.

அகத்தையும் தாயகத்தையும் வளர்க்கவேண்டிய கல்வி, வர்த்தகத்தை வளர்த்தது. ஆங்கில ஆட்சி அகன்றதாம் சிங்கள ஆட்சி சிலிர்த்தெழுந்தது. எமது மண் சிங்களக் குடியேற்றத்தால் சிதையத்தொடங்கியது. பின்பு சிங்களம் மட்டும் சரத்தால் எமது விழியாகிய மொழி மூடப்பட்டது. காப்பிய, இதிகாச இலக்கிய, இலக்கணப் பெருமை வாய்ந்த எமது மொழிக்கு பழி நேர்ந்தது. கவலைக்கு மேல் கவலை அலை அலையாக வந்தது. கல்விக்கு தரப்படுத்தல் வந்தது. கல்லூரிகள் தரைப்படுத்தலும் செய்யப்பட்டது.

அகதிகளாக்கப்பட்டோம். அகதி முகாமிற்குள் யுத்த அரக்கன் ஷெல் கொட்டாவி விடுகிறான். இச்சூழ்நிலையில் அகதி முகாமில் உள்ள மாணவர்களின் நிலையைப் பேசவும் வேண்டுமா?

மாணவர் படிக்க முற்பட்டால் ஒளிக்குத் தடை. யுத்தப் பேரொலி மாணவர்கள் கல்வியில் செலுத்தும் புலனைச் சிதறடிக்கச் செய்கின்றது; மாணவர்கள் எழுதிப் படிக்கும் கொப்பியும் சிறகடித்து உயரப் பறந்து செல்கிறது. சூரிய வெளிச்சத்திற்கு இருட்டடிப்புச் செய்ய முடியுமானால் அதையும் செய்யத் தயங்காது ஜனநாயகம் பிதற்றும் அரசியல்.

இப்படியெல்லாம் மாணவர் கவலைப் பட்டியல் நீண்டுகொண்டு போகையில், சில ஆசிரியர்கள் தாண்டிக்குளம் தாண்டிப்போய் கொழும்பின் தாலாட்டில் சுகம் காணுகிறார்கள். கல்வி; பரீட்சைப் படியேறி, பதவிக் குதிரையில் அமர்ந்து, உல்லாசச் சவாரி செய்து, கற்பித்துக் கொடுக்கும் வித்தையல்ல. அதோடு கல்வி வாக்குச்சீட்டுக்கு மனிதனை உருவாக்கும் விஞ்ஞானமும் அல்ல.

கார்முகிலிலும் ஓர் கனக மின்னல் உண்டு என்பது போல் இடிமுழக்கத்தின் மத்தியிலும் ஒரு சோலைக்குயில் கூவுகின்றது. செஞ்சோலையைப் பற்றிய செய்தி நிறைவைத் தருகின்றது. அனாதைகளாகவும் அங்கவீனர்களாகவும் ஆக்கப்பட்ட சிறுவர்களை அரவணைத்து ஆரோக்கியத்தையும் ஆளுமையையும் வளர்க்கும் ஒரு நிறுவனம் அது. மண்ணும் மக்களும் நிறைவு பெற ஒரு சோலை .

சான்றோர்களை வளர்த்தெடுக்கும் தாய் போல் சான்றோர்களை செதுக்கி எடுக்கும் சீலம் மிகுந்த சிற்பிகள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் திருத்தொண்டால் தேசம் தேஜஸ் பெற வேண்டும்.

■ ■ ■



படிப்பகம்

www.padippakam.com

# உயிரின் துடிப்பு

**சிறுகதை**

உதடுகள் பிரித்து நாவசைத்து சொற்களை உதிர்ப்பது அவ்வளவு கஷ்டமான காரியம் என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் ஒரு சில சந்தர்ப்பங்களில் ஒரு சில விடயங்களைச் சொல்ல நேரும் போதுதான் அது சிரமத்தை அனுபவிக்கமுடியும். அதனைச் சொல்வதைவிட மலையைப் புரட்டிவிடுவது கூட இலகுவானது போலத் தோன்றும் அந்தச் சில கணங்களில். என்றாலும் கூட இப்படியான சில கணங்கள் இப்போது அடிக்கடி வருவது சங்கடத்தை தோற்றுவிக்கிறது. உள்மன அரங்கில் சலிப்பை ஏற்படுத்தினாலும் கூட இந்த இழப்புக்களுக்கு பழிதீர்க்க வேண்டும் என்ற உணர்ச்சி மேலெழும்போது மரத்துப்போன நிலையில் சாவி கொடுக்கப்பட்ட பொம்மை போலவும் செயற்படவும் முடிகிறது.

ரஞ்சன் தன் சைக்கிளை மிதித்துச் செல்லும் போது நெஞ்சில் எழுந்த உணர்வுகளில் சிலவற்றை இப்படித்தான் வடிக்கமுடியும். ஆஷா இப்போது உனது உடல் மட்டும் தான் எம்மவர்களிடம் இருக்கிறதாம். உனது ஆவி பிரிந்துவிட்ட சேதியை எப்படி நான் போய்ச் சொல்வது.

## இளையவன்

போனமுறைகூட நீ வீட்டுக்கு வந்தபோது தனது மடியிலிருத்தி சோறு ஊட்டிவிட்டதாகச் சொன்னரே உனது அப்பா. அவரிடம் போய் நீ மறைந்த செய்தியைச் சொன்னால் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறார். எம்மவர்களுக்கு நீயொரு கப்டனாக விளங்கியவள். ஆனால் உனது அப்பாவுக்கு நீ இப்பவும் குழந்தை. உன்னுடைய அம்மாவுக்கு நீ ஒரு செல்லப்பிள்ளை. உனது காலில் முள்ளுக் குத்திவிட்டால் கூட தனது கண்ணில் காயப்பட்டதாக கலங்கிவிடும் உள்ளம் அவருக்கு. நீ செய்த குறும்புத் தனங்களால் எவ்வளவோ பெரிய நட்டங்கள் வந்தபோது கூட உன்னைத் தண்டிக்கும் தைரியம் அவருக்கு இருந்ததில்லை என்று என்னிடமே கூட எத்தனை தரம் சொல்லியிருப்பார். இப்படி எத்தனை எத்தனையோ விடயங்களை அறிந்த நானே நேரில் போய் "உங்கட மகள் இனி வரமாட்டா" என்று எப்படிச் சொல்லுவது? என்று எண்ணிய போது ரஞ்சன் மிதித்து வந்த சைக்கிள் தானாகவே வேகத்தைக் குறைத்துக்கொண்டது. வீதியோரமாக இருந்த நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு நிலத்தில் காலை ஊன்றியபடியே யோசனையில் ஆழ்ந்தான் ரஞ்சன்.

● ● ●

கோப்பாய் பகுதியிலுள்ள முகாமொன்றில் தங்கியிருக்கும் போராளி ரஞ்சன். அவன் தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொண்டு ஒரு சில வருடங்கள்தான் ஓடியிருக்கும். கூட இருந்தவர்கள் மரணத்தைத் தழுவிக்கொண்ட சம்பவங்கள் - சற்றும் எதிர்பாராத முறையில் திடீரென மரணித்துப் போன நண்பர்களோடு கழிந்த பழைய நினைவுகள் -இனிமேல் காணமாட்டோம் என்று நம்பவே முடியாமல் இருக்கும் சிலரது மறைவுகள் இப்படி எத்தனை எத்தனையோ விடயங்கள் மனத்திரையில் வந்து போய்க்கொண்டிருந்தன.

மீசை அரும்பும் பருவம் அவனுக்கு. புலிகளின் சீருடையில் புகுந்திருந்த அவனது உள்ளத்தில் எழுந்த அத்தனை உணர்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருந்தது அவனது முகம். நிலத்தில் ஊன்றியிருந்த கால் சைக்கிளை மிதிக்க உந்தினாலும் யாரோ வரவேண்டும் என்று காத்திருந்தது போல மனம் மறித்தது. அவனுக்குள்ளேயே ஒரு போராட்டம், ஒரு ஒத்திகை நடந்துகொண்டிருந்தது.

இன்பம் வீரமரணம் அடைந்த செய்தியைச் சொல்லப் போனபோது அவனது தாயார் அழுது குழறி ஊரைக்கூட்டிய சம்பவம் நினைவுக்கு வந்தது. "ஆனையிறவில் காலமை சரியான சண்டை. எக்கச்சக்கமான அடிபிடி" என்று தொடங்கியபோது ஆவலோடு கேட்கத் தொடங்கினாள் அந்தத் தாய்.

"என்ன மாதிரித் தம்பி என்ன நடந்தது? எல்லாம் விபரமாய்ச் சொல்லு" எனக் கூறிக்கொண்டே குசினிப் பக்கம் சென்றாள், அம்மா. குசினிக்கு வெகு சமீபமாகவே தலைவாசல் கொட்டகையும் அமைந்திருந்தது. தலைவாசல் திண்ணைக் குந்தில் இருந்த ரஞ்சன் மேற்கொண்டு எதையும் பேசமுடியாதவனாக தொண்டை கட்டிக் கொண்டது போலாயிற்று. "இவ்வளவு ஆர்வமாக சண்டையைப்பற்றி விசாரிக்கும் அவரிடம் எப்படி உங்கட மகன்..." என்று சொல்ல முடியும் எனத் தடுமாறினான். மௌனமாகக் கழிந்த அந்தக் கணங்கள் ஒரு யுகத்தின் சோகச் சுமையாகி தோள்களில் அழுத்தியது.

தேநீர்க் கோப்பையுடன் வந்த அம்மா ரஞ்சனின் கண்களில் சொரியும் கண்ணீரைக் கண்டு கலக்கமடைந்தாள். அவள் தேநீர்க் கோப்பையை நீட்டி அவனைக் குடிக்கச் சொல்லவும் வாய்விட்டே



படிப்பகம்

www.padippakam.com

அழுதுவிட வேண்டும் போல வேதனை அவன் நெஞ்சில் முட்டியது. ஆனால் பல்லைக் கடித்து சமாளித்துக் கொண்டவனாய் தேநீரை வாங்கிக் கொள்ள கையை நீட்டினான். "என்ன தம்பி என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்?" அவளாகவே கதையை கிளறினாள். "இல்லையம்மா இண்டையான் சண்டையில எங்களிலும் சிலபேர் ....." வார்த்தையை முடிக்க முன்பே துக்கம் தொண்டையை அடைத்தது. "என்ன நடந்திச்சு விளம்பராமய்ச் சொல்லுமன். இதென்ன அழுகை இந்த நாளில பொம்பிளையள் கூட இப்படி அழ மாட்டினம்" அவள் தைரியமூட்டினாள்.

"ஆனையிறவு காம்பில இருந்து வெளிக்கிட்டு வெளிய வரப் பார்த்தாங்கள். அதில சண்டை தொடங்கிச்சு. ஜீப்பு, றக்கு, கவசவாகனம் அது இது எண்டு கனக்க வரிசையாவர எங்கடையாக்களும் அடிச்சினம். துப்பாக்கியால சுட்டானுகள், ஆர். பி. ஜி அடிச்சினம். சரியான சண்டை நடந்தது தாம். அந்த நேரத்தில அவ்ரோ பிளேன் வந்து பீப்பாவைத் தள்ளிவிட்டது. அது எங்கட ஆக்கள் இருந்த பொயின்ற் ஒண்டில விழுந்து வெடிச்சது. அதில எங்கட பொடியள் கொஞ்சப்பேர் சாகவேண்டி வந்திட்டுது." என்று ஒரே மூச்சில் பல்லைக் கடித்தபடி, கூறிமுடித்த ரஞ்சன் நிமிர்ந்து அந்த அம்மாவின் முகத்தை ஒரு தடவை பார்த்தான்.

"வந்தவங்கள் திரும்பிப் போயிட்டாங்களோ" என்றாள் அவள்.

ஓமோம் எனத் தலையசைத்தவன் கூடவே "இன்பமும் போயிட்டான் அம்மா" என நிதானமாக அறுத்துச் சொன்னதுதான் தாமதம், கையிலிருந்த தேநீர் கோப்பை தரையில் உருள "ஐயோ என்ர ராசா" எனக் கதறி தலையில் அடிக்கத் தொடங்கிய அவளின் குரல் கேட்டு ஊரே கூடிவிட்டது. வந்தவர்கள் கேட்ட கள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கும் மனத்திடத்தையிழந்து அழுதுவடியும் கண்களும், கலங்கிய நெஞ்சமுமாக அங்கிருந்து வெளியேறிய அவனது மனத்திரையில் மறக்கமுடியாத நிகழ்ச்சியாக அது பதிவாகியது.

● ● ●

இது போலப் பிறிதொரு தடவை "ஜெயா அம்மான் வீரமரணம் அடைந்துவிட்டான்" என்ற செய்தியைச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்ட போதும் நடந்த சம்பவங்கள் நினைவில் வந்து மின்னியது ரஞ்சனுக்கு.

மன்னார் பக்கம் நடந்த சண்டையொன்றில் ஜெயா அம்மான் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டுவிட்டான் என்பது மட்டுமே ரஞ்சன் அறிந்த செய்தியாக இருந்தது. ஜெயா அம்மான் வீட்டுக்காரரோடு நெருக்கமான இயக்க ரீதியான தொடர்பு இல்லாதபோதும் ஓரிரு தடவை போய்ச் சந்தித்திருக்கிறான் ரஞ்சன். ஆனால் பெரிய சிரமம் எதுவும் இல்லாமலே சொல்லி முடித்து வரலாம் என்ற நினைப்போடுதான் அவன் அங்கு சென்றிருந்தான். ஆனால் அவன் வாசல் படலையைக் கடந்து உள்ளே போனபோது வானொலிப் பெட்டியில் சந்தோஷமான பாடல் வரிகள் போய்க்கொண்டிருந்தது. முன்பாக ஒரு கதிரையில் இருந்தபடி காலை ஆட்டிப் பாட்டை ரசித்துக் கொண்டிருந்தா ரதியக்கா.

"வாரும் தம்பி, ஏது இந்தப் பக்கம்? என்ன விசேசம்" என்று வரிசையாகச் சொல்லிக்கொண்டே கதிரையில் இருக்கும்படி சைகை காட்டினாள். "இருக்க நேரமில்லையக்கா. ஒரு அவசர அலுவல். ஐயா இல்லையோ" என்று பரபரப்புப்பட்டபோது அவள் சொன்னாள், "கொஞ்சம் இருங்கோ, தம்பிக்கு ஒரு கடிதம் தரவேணும் எண்டு இருந்தனான். வளவுக்க நிற்பார் ஐயா. கூப்பிடுறன் நீங்கள் இருங்கோவன், வாறன்" என்றபடி தாவிக்குதித்து வெளியே ஓடினாள்.

ஏதோ ஒரு மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கும் இந்த நிலைமையில் எப்படி இந்த வீட்டில இந்தச் செய்தியைச் சொல்லுறது என்றே விளங்காமல், தத்தளித்துக்கொண்டான். ஐயா வந்தபோதும் சரி.... பிறகு அம்மா வந்து கதைத்தபோதும் சரி... அவனால் வாய்திறந்து எதையும் சொல்லிவிட முடியவில்லை. இதனிடையில் அவசர அவசரமாக எழுதிய கடிதத்தை நான்காக மடித்து என் வலப்பில் போட்டபடி ஓடிவந்த அக்கா "இந்தக் கடிதத்தை கட்டாயம் தம்பியிட்டை குடுத்திடுங்கோ" என்றுநீட்டிய போதும் கூட மௌனமாக கடிதத்தை வாங்கிக்கொள்ளத்தான் முடிந்தது. எப்படி எடுத்துச் சொல்வது? எப்படி இந்தச் சந்தோசமான சூழலைக் குழப்பமுடியும்? எனத் தெரியாமல் தடுமாறிக் குழம்பி அவன் விரைவாக வெளியேறினான்.

இரண்டொரு வீடு தள்ளியிருந்த இன்னுமொரு ஆதரவாளர் வீட்டுக்கு போனபோது "ரதியக்காவுக்கு இன்று திருமணம் நிச்சயமாகி இருக்கிறது" என்று சொன்னார்கள். விம்மி வரும் கண்ணீரைத் துடைத்துக்கெண்டு செய்தியை தெரிவிக்க வேறொரு மார்க்கத்தைத் தேடவேண்டும் என முடிவு செய்தவனாகினான் ரஞ்சன்.

● ● ●

இந்தப் பழைய நினைவுகள் மீண்டும் மீண்டும் வந்து போய்க்கொண்டிருந்தது. என்ன ரஞ்சன் யோசிக்கிறீர்? ஏன் இந்தப் பக்கம்? என்றவாறாக நண்பன் ஒருவன் கேட்கவும் தன்னிலைக்கு வந்தவனாக மீண்டும் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான். "இல்ல இதில ஒரு வீட்ட போகவேணும்" என்றவன் தலையை ஒரு கணம் தடவிக்கொண்டான். வீட்போயிற்று மெதுவா கதையை ஆரம்பிச்சு



படிப்பகம்

www.padippakam.com

ஆஷா அக்காவுக்கு காயம் என்று சொல்லி, பின்னர் கொஞ்சம் கடுமையான காயம் என்று சொல்லி ஐயாவைக் கூட்டிக் கொண்டுவர புகமுடலும் எமது அலுவலகத்திற்கு வரச் சரியாக இருக்கும் எனத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு இருந்தது ரஞ்சனின் மனதில்.

"டேய் நீ இப்ப எங்க போறாய்" என்றான் ரஞ்சன்.

"லைபிரரியில் போய் பேப்பர் பார்ப்பம் எண்டுதான் வந்தனான். ஏன் கேட்கிறாய் என்றான் மற்றவன்.

"அப்ப வாறியே இதில ஒரு வீட்ட போட்டு வருவம்."

"கனநேரம் செல்லுமே?" "இல்ல சுணங்காமல் வரலாம். வா போட்டு வருவம்" எனக்கூறியபடி ரஞ்சனின் சைக்கிளுக்குச் சமாந்தரமாக மற்றவனின் சைக்கிளும் சென்று கொண்டிருந்தது. முத்திரைச்சந்தியைக் கடந்து செம்மணி நோக்கிச் செல்லும் தார் றோட்டில் விரைந்து ஒரு சின்ன ஒழுங்கையில் திரும்பி, ஒரு தட்டிப்படலையின் வாசலில் வந்து நின்றது இரண்டு சைக்கிள்களும்.

● ● ●

சைக்கிளின் மணியை ஒலித்து வீட்டுக்காரரைக் கூப்பிட்டான் ரஞ்சன்.

"என்ன இண்டைக்குப் புதுநூதனமாய் கிடக்கு வாசலுக்கை நிண்டு மணியடிக்கிறது." ரஞ்சனை இனம் கண்டுவிட்ட ஆஷாவின் தாயார் கூறினார்.

"ஒரு அவசர அலுவல் அதான் வந்தனாங்கள்" "அது கிடக்கட்டும் உள்ளே வாங்கோவன்ரா," இனி ஒண்டும் சொல்ல ஏலாது போய்த்தான் ஆக வேணும் என மனதுக்குள் நினைத்தவனாய் சைக்கிளை விட்டிறங்கினான் ரஞ்சன். இருவருமாய் வாசல் படலை தாண்டி உள்ளுக்குள் போயினர்.

"ஐயா இல்லையே?"

"அவர் உங்கதான் மாட்டுக்குத் தண்ணி வைக்கிறார். உங்கள் ரெண்டு பேரையும் காணவேணும் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்." அவள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தாள்.

"ஏன் என்ன விஷேசம்"? என்றான் ரஞ்சன்.

"அது கிடக்கட்டும். வந்த விசயத்தைச் சொல்லுங்கோவன்" இது அவள்.

இண்டைக்கு கட்டுவன் பக்கத்தில் ஷெல் அடிச்சதெல்லே" என்றான் ரஞ்சன் நண்பனைப் பார்த்து.

"ஓமோம், வடக்குப் பக்கமாய் ஒரே சத்தமாய்க் கிடந்தது. கட்டுவனிலேயே ஷெல் அடிச்சவங்களாம்" என்று அவள் கூறவும் ஐயா வந்து சேரவும் சரியாக இருந்தது.

ஐயாவுக்கு ஒரு விஷயம் என்று தனியாக அவரைக் கூட்டிக்கொண்டு போய் "கட்டுவனில ஆஷா அக்காவுக்கு காயம்" என்று மெல்லிய குரலில் இழுத்தான் ரஞ்சன். ரஞ்சனின் முகத்தைச் சுட்டெரிப்பதைப் போல் பார்த்தவர் "காயம் எந்த இடத்தில" என்றார் குரல் தழுதழுக்க.

"கொஞ்சம் பெரிய காயம். நீங்கள் வந்து பார்த்தால் நல்லது." ரஞ்சன் மேலும் இழுத்தான்.....


"எங்க வரவேணும்? ஆஸ்பத்திரிக்கோ அல்லது...." "எங்கட ஓபிசுக்கு வந்தால் சரி.

அவருக்கு முழு விசயமும் விளங்கியிருக்கவேணும்.

"அப்ப தம்பி பொடியை (Body) எப்ப வீட்ட கொண்டு வரலாம். அதுக்கு நாங்கள் என்ன ஆயத்தம் செய்யவேணும்?" அவர் தொடர்ந்தபோது ரஞ்சன் விக்கித்தான். அவனது கண்ணிலிருந்து சிந்திய நீர்த்துளிகள் தாரை தாரையாக அந்த நிலத்தை நனைத்துக் கொண்டிருந்தன.

"போராட்டத்தில் இழப்புக்கள் வருவது இயல்புதானே" என்று அவர் கூறிய ஆறுதல் வார்த்தைகள், அவனது கண்ணீர் ஆற்றுக்கு அணைகட்டப் போதுமானதாக இல்லை.

● ● ●



ஒருவர்: எல்லா இடமும் சென்ட் வாசம் வீசுதே?

மற்றவர்: உமக்குத் தெரியாதா இப்போ பொடியள் ஓடிக்கலோனில் வாகனம் ஓடுகினம்.



படிப்பகம்




சுவை மீட்டல்



பெட்டிசன் எழுதுபவருக்கு
யமலோகத் தண்டனை

www.padippakam.com

# வழுக்..... கை

- சரித்திரன்

தென்னகத்துத் தென்னாலிராமன், சிங்களத்தின் ஆந்தரே, சீனதேசத்து அவாந்தி, அக்பர் பாதுஷாவின் அன்பிற்குரிய முல்லா நஸாருத்தீன், கெய்ரோ நகரத்து கோஹா..... கோமாளித்தனத்திலிருந்து புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்திப் பிரசித்தமான இவ்வரிசையில் ஒரு சாதுரியக் கவிஞர் மதுரகவி.

மகததேசத்து மன்னன் விஜயகுப்தனின் பெருமதிப்பிற்கு மிகப் பாத்திரமானவர் இந்த மதுரகவி. மன்னனும் அடிக்கடி பரிசுகள் அளித்து இவரையே மரியாதை செய்து வந்தான். தர்பாரின் மற்றக் கவிஞர்கட்கு இது பொறுக்குமா? மதுரகவியின் அறிவாற்றலைச் சந்தேகிக்கும்படி பல வகைகளிலும் மன்னனைத் தூண்டினர்.

இறுதியில் தீர ஆலோசித்த மன்னன், மதுரகவியை மடக்க எண்ணி ஒரு கேள்வி எழுப்பினான்.

"கவிஞரே! எனது உள்ளங்கையில் ஏன் மயிர் இல்லை?"

"மன்னா! தானங் கொடுத்துக் கொடுத்துக் தங்கள் கை தேய்ந்ததினால் மயிரெல்லம் அற்றுப் போய்விட்டது. "

"ஆகா; அபாரம்! அதுசரி உமது உள்ளங்கையிலும் மயிர் இல்லையே?!"

"வேறொன்றுமில்லை, வேந்தே! தங்களிடம் தானம் வாங்கி வாங்கியே அது வழுக்கையாகிவிட்டது".

"அருமையிலும் அருமை ஆகாகா!!... "

பொறாமைக் கவிஞர்கள் வாடினர்! வார்த்தைகளாற் சாடினர்.

"இதோ எங்கள் உள்ளங் கைகளிலும்தான் மயிர் இல்லை! இதற்கு என்ன சொல்லுகிறீர்?"

மதுரகவிக்கு சிரிப்பு எழுந்தது; பதிலும் தெறித்து விழுந்தது.

"மன்னனிடம் தானம் பெறுபவரைப் பார்த்துப் பார்த்து மனம் வெதும்பி கை பிசைய உண்டாகும் உஷ்ணத்தினால்தான் மயிர் உதிர்ந்து உங்கள் உள்ளங்கைகள் ஒரே வழுக்கையாகிப் போயின. "

மன்னன் மனதில் மதுரகவி மறுபடியும் உயர்ந்தார்.

■ ■ ■



ஒருவர்: பொறியியல் வல்லுனர் வீட்டில் இருக்கிறாரோ?

மாமியார்: ஆர் அவர்.

ஒருவர்: உங்க மருமகன் எஞ்சினியரைத் தான்.

மாமியார்: நாங்கள் எஞ்சினியர் என்ற பெயருக்கு லட்சக் கணக்கா சீதனம் கொடுத்தெடுத்திருக்க அவர் பொறியியல் வல்லுனராம்!


**MARCEL COIFFURE**

மார்ஷல் சலூன்

MARCEL SALOON

20, RUE SIMART, 75018 PARIS
TEL: 42 64 73 22

M: MARCADET POISSONNIERS,
BUS: 80, 85, 60, 31

OUVERT DE 10H A 20H30
FERME LE DIMANCHE




படிப்பகம்

www.padippakam.com



- திருமண வைபவங்கள்
- பிறந்த தின விழாக்கள்
- பொது நிகழ்ச்சிகள்
- வீடியோ திரைப்படங்கள்



எவையாயினும் கலைவண்ணத்துடன் ஒளிப்பதிவு செய்திட
பிரான்ஸில் என்றும் உங்கள் நினைவுகளில்

K.K.S TELE MOVIE



திருமண மண்டபம், மணவறை என்பனவும்
ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

பாரிஸில் தயாரிக்கப்பட்ட திரைக்காவியமான
'விடுதலை பாதையில் ...' மூலம்
திரைப்பட ஒளிப்பதிவாளர்களாகவும்
அறிமுகமாகிப் புகழ் பெற்றவர்கள்
கே. கே. எஸ் ரெலி மூவி ஸ்தாபனத்தினர்

25, Rue BISSON, 75020 PARIS.

தொடர்புகட்கு: 43 58 15 59 / 47 91 43 15

படிப்பகம்

www.padippakam.com


# கோல்டன் ஸ்டார்

நகைத் தேவைகளை
நம்பிக்கையுடன் பூர்த்தி செய்திட
நங்கையரே, ஆடவரே விஜயம் செய்யுங்கள்...

● சிங்கப்பூர் உடைகள் ● சிறந்த ரக சாறிகள் ● சேட்ஸ் ● ரவுசார்ஸ் ● ஜீன்ஸ்
● T. சேட்ஸ் ● பட்டு வேஷ்டிகள் ● பட்டுப்புடவைகள்
● பஞ்சாபி உடைகள் ● கவுண்கள்
● கைக்கடிகாரங்கள் ● சுவர்மணிக்கூடுகள் ● எவர்சில்வர் பொருட்கள்
● பித்தளைப் பொருட்கள் ● கல்குலேற்றர்கள் ● றேடியோக்கள்
● எலக்ற்றோனிக் பொருட்கள் ● றைஸ்குக்கர்கள்
● வீடியோ, ஓடியோ கொம்பக் டிஸ்குகள் ● கோல் கவரிங் நகைகள்
● அழகு சாதனங்கள் ● அன்பளிப்புகள் யாவற்றிற்கும்
விஜயம் செய்யுங்கள்

## கோல்டன் ஸ்டார்

## GOLDEN STAR

199, Rue du Fbg. St-DENIS, 75010 PARIS. (Metro: Gare du Nord ou La Chapelle)
Tel: 42 09 26 50 / 42 07 26 44. Fax: 40 05 94 87



# GAYA S.A.R.L

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
அரிசி மா, மிளகாய் தூள் ஏனைய சகல மளிகைப் பொருட்களும்
யானைமார்க் குளிர்பானங்கள், Stout, Bear, Mendis Special,
மரக்கறி வகைகள், மீன், நண்டு, றால்
மற்றும் Video, Audio, CD என்பனவும்,
மற்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில்வர் பாத்திரங்கள்
பித்தளைச் சாமான்கள் என்பனவும் மலிவாகவும்
தரமாகவும் பெற்றுக்கொள்ளவும், வாரசஞ்சிகைகள் உடனுக்குடன்
பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய இடம்:

## GAYA S.A.R.L

3, Rue des Apennins, 75017 Paris.
Metro: Brochant / La Foche
Tel: 42 26 38 97. Fax: 42 28 18 01


படிப்பகம்

www.padippakam.com

## சுவை மீட்டல்








படிப்பகம்

www.padippakam.com

# குரு(தி)ஷேத்திரம்

தனது பெயரின் முதலெழுத்தான 'P' என் பதை ஒரு தாளில் எழுதி அந்தப் பவுடர் ரின்னில் ஒட்டினான் பிரசாத். விளையாட்டாகத் தான் அப்படி ஒட்டிய பவுடர் ரின்தான் பின்னர் தடயப் பொருளாக அமையப்போகிறதென்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை. என்ன இருந்தாலும் இளைஞன் தானே அவன்? காலையிலும் மாலையிலுமாவது பவுடர் போட்டுக்கொள்ள வேண்டுமென்பது அவனுக்கு ஒரு ஆசை. ஆனால், அதற்கு வசதியில்லை. ஜமுனாக்கா வேணு அண்ணாவைச் சந்திக்க வரும்போது தனது கைப்பையில் பவுடர் கொண்டு வருவார். அப்படி வரும் சமயங்களில் அந்தப் பவுடரை இவன் எடுத்துப் பூசுவதுண்டு. அதனால், ஜமுனாக்கா வந்தால் பவுடர் பூசலாம்" என்று இவன் அடிக்கடி கூறுவதுண்டு.

மட்டக்களப்பு நகர 'மக்கள் வங்கிக் கிளையில்' பணியாற்றும் ஜமுனாக்கா தனது கணவனான பொன். வேணுதாசைச் சந்திப்பதென்றால் சுலபமான காரியமல்ல; எத்தனையோ இராணுவக் காவலரண்களைத் தாண்டி வரவேண்டியிருக்கும். சில சமயங்களில் தனது குழந்தைகள் அபராஜிதா, பிரவீனா இருவரையும் அவருக்கு கூட்டிக்கொண்டு வந்து காட்டுவதுமுண்டு. இவ்வளவு சிக்கலுக்குள்ளால் பன்குடாவெளிக்குப் போகவேண்டுமென்பதால் அதைப் பெரும்பாலும் அவர் தவிர்த்து வந்தார். போகும் போது ஏதாவது விபரீதம் நடந்தால்... இதற்காகவே அதனைத் தவிர்த்து வந்தார். குழந்தைகளைக்காண தந்தை ஏங்குவார் என்பது அவருக்குத் தெரியும்; ஆனாலும் என்ன செய்வது?

மட்டக்களப்பு நகரினுள் இராணுவம் நுழைந்ததற்குப் பின்னர் வேணு அண்ணர் பன்குடாவெளிப்பகுதியிலேயே இருந்தார். போராளிகள், ஆதரவாளர்கள், இயக்கத்திலிருந்து விலகியோர், பொதுமக்கள் எல்லோருமே அப்பகுதியில் ஒன்றாகத்தான் இருந்தனர். எந்த வித்தியாசமும் இல்லை.

■ ■ ■

அது மழைக்காலம். 12. 12. 1990 அன்று இரவு. ஜமுனாக்கா பன்குடா வெளிக்கு வந்தார். வழக்கமாக அவரைச் சந்திக்கும் வீட்டில் எல்லோரும் அவருடன் கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போதுதான் அவர் பிரசாத்தின் ஆடைகளைக் கவனித்தார். "டேய்... பிரசாத்! அடுத்தமுறை நான் வாற போது உனக்கு சாறனும் சேட்டும் வாங்கிற்று வாறன்."

■ ■ ■

23. 12. 1990 அன்று காலை - ஜமுனாக்கா வீட்டிற்குப் புறப்பட்டார். 'அக்கா' நிண்டுட்டுப் போகலாமே? என்ன அவசரம்?" என்று கேட்டான் பிரசாத். "இல்ல.... வருஷக் கடைசி... வேலை கூட. அத்தோட வாழைச்சேனைக்கு வேலை மாறுற சம்பந்தமா கொஞ்ச அலுவலிருக்கு. அதோட இன்னொரு பிரச்சனை, வருஷக்கடைசியில நேர்சறியில நடக்கிற கலை நிகழ்ச்சிக்கு எல்லாப் பெற்றோரும் போச்சினம். நாங்கள்தான் போகல்ல. அப்பா இல்லாத இடத்துக்கு நானாவது போயிருக்கவேணும். எனக்கும் நேரம் கிடைக்கல்ல. நியூ இயருக்காவது பிள்ளைகளோட நான் இருக்கவேணும். இல்லாட்டி பிள்ளைகளுக்கு மனசில ஏக்கமாயிருக்கும். எங்கடை பிள்ளைகள் என்ன அப்பா அம்மா இல்லாத அநாதைப் பிள்ளைகளா?" என்று கேட்டார். இவ்விதம் கேட்கும் போது அவரது முகத்தில் பெருமிதம் தெரிந்தது.

ஒரு ஆதரவாளன் அக்காவை வழியனுப்பக் கூட்டிக்கொண்டு போனான். சற்றுத் தள்ளியிருந்த ஒருவன் சொன்னான்: "அக்காவை கூட்டித்துப் போறான்; கொம்மைக்கு குடுக்கப் போறாண்டோய்!" - அவன் மீது பிரசாத் சீறிப்பாய்ந்தான்.

"டேய்.... அப்படியொண்டும் சொல்லாதே!"

■ ■ ■

கொடுவாமடுச் சந்தியில் அனைவரும் காத்திருந்தனர். செங்கலடியிலிருந்து ஒருவரும் வரவில்லை. இந்தப்பக்கமிருந்தும் யாரும் அங்கு செல்லும் அறிகுறியுமில்லை. மக்கள் நடமாட்டம் இருந்தால்தான் அந்தப் பாதை வழியாக அனுப்பலாம். எனவே மைலவட்டுவான் வழியாகச்சென்று சித்தாண்டிக்குச் செல்லத் தீர்மானித்தனர். வழியில் மூன்று வயோதிபர்கள் வந்தனர். அவர்கள் செங்கலடிப்பாதை வழியாக மட்டக்களப்பிற்கு செல்வதாகக் கூறவே, அவர்களுடன் அக்காவையும் அனுப்பி வைத்தனர்.

பிள்ளைகளைச் சந்திக்கும் வரை அக்காவுக்கும் மனசில அமைதியிருக்காது. பிள்ளைகளை நினைக்கும் போது கூடிய நடையின் வேகம், இராணுவத்தினரின் காவலரண்கள் நெருங்கும் போது படிப்படியாகக் குறைந்தது.

சிறிது நேரத்தில் வேட்டொலிகள் கேட்டன. இவர்களை அனுப்பிவிட்டடுக் காத்திருந்த அனைவருமே திடுக்கிட்டனர். காந்தன், பிரசாத் ஆகியோர் மனதில் அந்த வசனமே எதிரொலித்தது; 'அக்காவை கொம்மைக்கு குடுக்கப்போறாண்டோய்!"

■ ■ ■



படிப்பகம்

www.padippakam.com

எல்லோரும் மீண்டும் கொடுவாமடுவுக்கு ஓடி வந்தனர். ஜமுனா அக்காவுடன் போன மூன்று வயோதிபர்களில் ஒருவர் மட்டும் ஓடி வந்தார். அவருக்கு சூடு பிடித்திருந்தது. அக்காவைக் காண வில்லை. முதலில் இவருக்கு மருந்து கட்டுவோம் என்றெண்ணி அவரைக் கூட்டிக்கொண்டுசென்றனர். விஷயத்தைக் கேட்பதற்கு முன்பே வயோதிபர் சொன்னார்.

"சுட்டுப்போட்டானுகள் தம்பி! செங்கலடி ஆஸ் பத்திரிக்கு கிட்ட இருந்த வஸ் ஹோல்டடியில ஆமிக்காறனுகள் நிண்டானுகள்; எங்களை கண் டுத்து திரும்பிப் போகச்சொல்லி கையைக் காட்டி னானுகள்; திரும்பி நடக்கத் துடங்க சடசடெண்டு சுட்டானுகள்; என்னோட வந்த ரெண்டுபேரும் செத் துப் போச்சினம்!" - காந்தன் அவசரப்படுத்தினான்: "அக்காவுக்கு என்ன நடந்தது?" இளைத்தபடியே அவர் சொன்னார்: "அந்தப் புள்ள என்ட கையைப் புடிச்சுக்கொண்டு ஓடி வந்தது. முருகா, முருகா, என்னைக் காப்பாத்து!' எண்டு சொல்லிக்கொண்டு ஓடிவந்தது.... அப்பிடி ஓடி வரயுக்குள்ள வெடி பட்டுட்டுது! என்னைத் தூக்கிக்கொண்டு போங்கோ!' எண்டு கத்திச்சுது அந்தப் புள்ள! நான் தூக்கிறதுக் காகக் குனிஞ்சன்; அப்பத்தான் எனக்குச் சூடு பட் டிடுச்சு; என்னால முடியல்ல - ஓடி வந்திட்டன்" என்றார்.

வயோதிபரை அனுப்பிவிட்டு தொடர்ந்தும் அங்கே காத்திருந்தனர் காந்தனும் வேணு அண் ணாவும். மழை பெய்துகொண்டிருந்தது. நனைந்தப டியே காந்தனிடம் வேணு அண்ணா சொல்லிக்கொ ண்டிருந்தார்: ஜமுனா எப்படியும் தப்பியிருக்கும். இந்த மழைக்குள்ள ஏதாவது மரத்துக்குக் கீழை நிக்கும். காந்தன்.... நான் கலியாணம் முடிச்சுக் குடும்பம் நடத்தினன் எண்டு பேர்தான்; எனக்கு இத்தினை வயசாச்சு.... கடையில உடுப்பு எடுக் கக்கூடத் தெரியாது; எல்லாமே அவள்தான். நான் சட்டத்தரணியா வந்ததே அவளாலதான். எல்லாம் அவளின்ரை ஆசைதான். அவளுக்கு ஒரு முறை மச்சான் இருந்தான். அவனுக்கு இவளைத்தான் சாணைக்கூறை போட்டது. அவன் இவளைக்கட் டுவான் எண்டுதான் காத்திருந்தினம். ஆனா, அவன் படிச்சு சட்டத்தரணியானதுக்குப் பிறகு இவளைக் கலியாணம் செய்ய விரும்பேல்ல. அவ னுடைய தகுதிக்கு இந்தக் கஷ்டப்பட்ட குடும்பத்தில கலியாணம் செய்ய அவனுக்கு கஷ்டமாயிருந்துது; அவன் வேற இடத்தில கலியாணம் செய்திட்டான். ஆனால் இவள் துவண்டு போகல்ல; வாழ்க்கை யைச் சவாலா எடுத்துக்கொண்டாள்; அந்த நிலை யில அவள் ஒரு சபதமே எடுத்துக்கொண்டாள், தான் முடிக்கிற ஆளை கலியாணத்துக்குப் பிறகு சட்டத்தரணியா ஆக்கிறதெண்டு. அவளின்ரை விருப்பத்துக்காகத்தான் நான் சட்டத்தரணியானன். என்னுடைய விருப்பத்துக்கு தமிழில சத்தியப் பிரமா ணம் செய்தன். அண்டைக்கு சத்தியப்பிரமாணம் செய்த 17 தமிழரில நானும் இன்னொருத்தரும்தான் தமிழில சத்தியப்பிரமாணம் செய்தம். நான் சத்தியப் பிரமாணம் செய்த அண்டைக்கு அவள் பட்ட சந் தோஷம்.... அண்டைக்கு அவள் என்ட மனுசியா நடக்கல்ல - என்ட அம்மா மாதிரியே நடந்தாள்.

நாங்கள் கலியாணம் முடிச்சதில் இருந்து குடும் பமா இருந்த நாட்கள் மிகக்குறைவு. ஜெயிலில் இருந்தும், தலைமறைவாயும் இருந்ததாலயும் எங் கட பிள்ளைகள் கூட அப்பாட அரவணைப்பில்லா மல் தான் வளர்ந்ததுகள். அப்படியிருந்தும் என்னு டைய போக்கை மாத்தச் சொல்லி அவள் கேக் கல்ல.... இண்டைக்கு அவள் வெடிபட்ட காயத் தோட மழைக்கு நனைஞ்சு கொண்டு நிக்கிறாள்."

மழைக்குப் போட்டியாக அவர் கண்களும் நீரைச் சொரிந்து கொண்டிருந்தன.

■ ■ ■

அன்று முழுக்க சம்பவம் நடந்த பகுதியை நோக் கிப் போகமுடியவில்லை. அனைவரும் பன்குடா வெளிக்குத் திரும்பினர்.

இதற்கிடையில் வலையிறவுப் பக்கமாக நகரத் துக்குள் ஒருவரை அனுப்பினார் காந்தன். அக்கா போய்ச் சேர்ந்திட்டாரா என்பதை அறிந்துவரச் சொன்னான். இல்லாவிடில் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக அக்காவின் நிலையை அறியுமாறும் சொல் லியனுப்பினான். அன்று அவன் நித்திரைக்குப் போவதற்கிடையில் ஆயிரம் தடவை வேணு அண்ணா சொல்லியிருப்பார்: "ஜமுனா எப்படியும் தப்பியிருக்கும். ஆற்றை வீட்டிலயாவது ஒளிச்சிருந் திட்டு வரும்."



மாணவன்: ஒரு சந்தேகம்

ஆசிரியர்: என்ன அது?

மாணவன்: கும்பகர்ணன் சிவராத்திரிக்கு நித்திரை முழித்தவரா?

ஆசிரியர்: ! ! ! !



படிப்பகம்

www.padippakam.com

நகரத்தில் தகவலைத் தெரிவித்தவரிடம் வேணு அண்ணாவின் மூத்த மகள் அபராஜிதா வினாவினாள்: "அப்பாவைச் சுட்டதா? அம்மாவைச் சுட்டதா? அப்பாவைத்தான ஆமி தேடினவன்? அப்ப அம்மாவை ஏன் சுட்டான்?" குழந்தையின் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை அவருக்கு; "உன்டை அம்மாவைப் போல ஆக்களைச் சிங்களவன் சுடுறதைத் தடுக்கத்தான் அந்தக் காலத்தில தமிழிளைஞர் பேரவையை அமைச்சவர் உன்ட அப்பா" என்று சொல்லுமளவுக்கு அரசியல் தெரிந்தவரல்ல அவர்.

■ ■ ■

நித்திரை செய்த நேரம் குறைவுதான். நேரத்துடன் கண்விழித்துவிட்டான் காந்தன். பக்கத்தில் படுத்திருந்த வேணு அண்ணாவைக் காணவில்லை. எங்கே போயிருப்பாரென்றெல்லாம் சிந்திக்கவில்லை அவன். நேரே கொடுவாமடுச் சந்திக்கு வந்தான். அங்கே அவர் நின்றார்.

பக்கத்தில் போன காந்தனிடம் அவர் சொன்னார்: "காந்தன்..... ஜமுனா செத்துப்போச்சு! அதில சந்தேகமில்லை. அவளின்ரை பொ(B)டியை எடுக்கவேணும். இண்டைக்கு எப்படியும் எடுத்திடவேணும் என்றார். உறவால் மருமகனாக இருந்தாலும் "அண்ணை" என்றே அவரை அழைப்பது வழக்கம். அந்த வழக்கத்தில், "ஓமண்ணை.... இண்டைக்கு எப்படியும் எடுப்பம்" என்றான் காந்தன். நகரத்துக்குச் சென்றவர் ஜமுனாக்கா அங்கு செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்தினார். நேரம் போய்க்கொண்டிருந்தது.

அன்று செங்கலடிப் பாதை வழியாக மக்களை பன்குடாவெளி வருவதற்கு அனுமதித்திருந்தனர் இராணுவத்தினர். அவ்வாறு வந்தவர்களிடம் ஜமுனாக்காவைப் பற்றி விசாரித்த பொழுது ஒவ்வொருவரும் ஒவ்வொரு தகவலைச் சொன்னார்கள்: "நீலச் சேலை உடுத்த பொம்பிளை ஒண்டின்ரை பொ(B)டி கிடக்குது!" - "ஒரு பொ(B)டியை காகம் கொத்துது - இதற்குமேலால் வேணு அண்ணரால் தாங்கமுடியவில்லை; "காந்தன்..... ஜமுனாவின்ர பொ(B)டியில ஒரு துண்டையெண்டாலும் எடுத்துக்கொண்டந்து எரிக்கவேணும்!" என்றார்.

ஒரு குழு தேடுதலுக்குப் புறப்பட்டது. முன்னே பிரசாத் சென்றுகொண்டிருந்தான். முதலில் வயோதிபர்கள் இருவரது உடல்களும் அகப்பட்டன. அக்காவைப்பற்றிய தடயங்களைக் காணவில்லை. முதல்நாள் துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்பிய வயோதிபர் மீண்டும் வரவழைக்கப்பட்டார். அவர் ஜமுனாக்கா சூடுபட்டு விழுந்த இடத்தை அடையாளம் காட்டினார். அந்தப் பகுதியில் தொடர்ந்து தேடினர். அப்போது அவனது கையில் அகப்பட்டது ஒரு பவுடர் ரின். அதைப்புரட்டிப் பார்த்தபொழுது அவன் ஒட்டிய "P" என்னும் எழுத்துக் காணப்பட்டது.

■ ■ ■

நிலமட்டத்திற்குக் கிட்ட தண்ணீரைக்கொண்டிருந்த ஒரு கிணத்தை எட்டிப் பார்த்தான் பிரசாத். ஜமுனாக்காவின் பிரேதம் மிதந்துகொண்டிருந்தது. எட்டித் தூக்கினான். ஒரு சாக்கில் கிடத்தித் தூக்கிக்கொண்டு வந்தனர். காந்தனுக்குப் பக்கத்தில் நின்று அதைப் பார்த்துக்கொண்டிருந்த வேணு அண்ணர் அப்போதுதான் கவனித்தார், ஜமுனாக்காவின் கை நிலத்தில் இழுபட்டபடி வந்துகொண்டிருந்தது. "ஜமுனா..... கைமுட்டுது" உரக்கக் கத்தினார். அக்கணத்தில் தான் ஜமுனாக்கா இல்லாத உலகம் தன்னெதிரில் இருப்பது புரிந்தது; சுதாகரித்துக் கொண்டு சொன்னார்! "பிரசாத்..... கைமுட்டுதடா."

இவ்வளவு நேரமும் அடக்கிக்கொண்டிருந்த அழுகை பீறிட்டு எழுந்தது. கரத்தையொன்றில் ஜமுனாக்காவின் சடலம் கிடத்தப்பட்டது. கொட்டும் மழைக்கிடையில் கரத்தையைப் பிடித்தபடி சென்றுகொண்டிருந்தார் வேணு அண்ணர். இந்தக் காட்சியை எப்படிச் சகிப்பது என்று திண்டாடிக்கொண்டிருந்த காந்தனிடம் "காந்தன்.... தொந்தரவு செய்யிறதா நினையாத; புதுச்சீலையொண்டும் சட்டையொண்டும் வேணும்" என்றார் அவர். பிரசாத்துக்கு புது உடுப்பு எடுத்துக்கொண்டு வருவதாகச் சொன்ன அக்காவுக்குத் தான் புது உடுப்பு எடுக்க வேண்டிய நிலை - சாக்கினால் சுற்றப்பட்ட அவரது உடல் - இதை நினைக்க காந்தனுக்கு தலை கிறுகிறுத்தது. ஆனாலும், ரவையாய் விரைந்தான்.

புறப்பட்டுவிட்டானேயொழிய அவன் மனதில் ஒரு கேள்வி: "இந்த இடத்தில புதுச் சீல சட்டைக்கு எங்கே போறது?" எள் என்றால் எண்ணெய்யாய் நிற்பவர்கள் தானே மட்டக்களப்பு மக்கள். ஜமுனாக்காவின் உடல் வருகிறது என்பதைக் கேள்விப்பட்ட உடனே தமது மகளுக்கென வாங்கிய புதுச்சேலையை வெளியில் எடுத்து அதற்கேற்ற வகையில் சட்டையும் தைப்பித்துக்கொண்டிருந்தார் ஒரு குடும்



"எசமான், என்ர வீடு தீப்பற்றி எரிகிறது?"
"அவசரப்படாதே! ஒரு தெரிவுக்குழு நியமிக்கிறேன்; அதன் யோசனைப்படி நடப்போம்."



படிப்பகம்




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# AGILAN

10. 06. 92 புதன்கிழமை முதல்
இடமாற்றத்துடன்
அகிலன்ஸ் வீடியோஸ் & சலூன்
குதூகல ஆரம்பம்

## AGILAN VIDEOS



அன்றும் இன்றும் உங்களை
ஆவலுடன் கேட்கத் தூண்டும்
உங்கள் அபிமானப் பாடகர்களின்
பாடல்கள் அடங்கிய
ஓடியோ, வீடியோ, C.D.

அகிலன்ஸ் வீடியோஸ் புதிய அறிமுகம்
* திரை மெட்டுக்கள் *
பார்த்து கேட்டு மகிழுங்கள்

அனைத்து வார, மாத சஞ்சிகைகள்
பத்திரிகைகளும் கிடைக்கின்றன.

## AGILAN SALOON



அழகை அள்ளி வழங்கும்
அதிநவீன சிகை அலங்காரம்
ஆடவர்களின் அலங்கார நிலையம்
அதுவே நிலையான இடம்:

பெண்களுக்காக சனி ஞாயிறு கிழமைகளில்
விசேடமுறையில் பயிற்சிபெற்ற
பெண் முடிதிருத்துபவர் சேவை புரிவார்.

203, RUE DU Fg. St. DENIS,
75010 PARIS.
TEL: 42 05 30 40

Metro:
LA CHAPELLE ou
GARE DU NORD

படிப்பகம்

www.padippakam.com

பப் பெண்மணி. காந்தனைப் பொறுத்தவரை திருப்தி. இதில் மட்டுமா திருப்தி! அக்காவைக் கொல்வதற்கிடையில் இராணுவத்தினர் அவரைப் பாலியல் வன்முறைக்குட்படுத்தியிருப்பார்களோ? என்ற சந்தேகம் அவனுள் இருந்தது. அதை அவன் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. அக்காவைப் பிணமாகக்கொண்டு வரும் போதுதான் அவதானித் தான் - சேலை சட்டையுடன் இணைத்துக்குத்தப் பட்டிருந்த ஊசி அப்படியே இருந்தது. ஆம்.... அப்படியேதும் நடக்கவில்லை; திருப்தி. அவனுக்குப் பளிச்சென்று ஒரு கேள்வி: "எதில் எதிலெல்லாம் திருப்தி காணும் நிலை வந்துவிட்டது நமக்கு ?"

■ ■ ■

ஜமுனா அக்காவுக்கு ஒரே ஒரு சூட்டுக்காயம். முதுகில் பட்ட ரவை வயிறு வழியாக வெளியேறியி ருந்தது. வைத்தியம் செய்திருந்தால் காப்பாற்றியிருக் கலாம். கழுத்தில் தெரிந்த காயம் காப்பு, சங்கிலி போன்ற ஆறுக்கு மேற்பட்ட பவுண் நகைகளைக் கைப்பற்றத்தான் இவரைக் கொன்றிருக்கிறார்கள் என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டியது.

சடலம் எரிந்து கொண்டிருந்தது.

நகரத்திலிருந்து வந்த லொறி அந்த இடத்தை வந் தடைந்தது. அதில் வேணு அண்ணருக்கு உறவின ரொருவர் அனுப்பிய கடிதம் வந்தது. அவர் கலங் காமல் இருப்பதற்காக அது எழுதப்பட்டது. "ஜ முனா உயிரோடதான் -விசயத்தை வெளியில விட வேண்டாம். எப்படியும் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் முயற்சித்து ஆளை வெளியில எடுக்கலாம்."

எப்படியோ அந்த இடத்திற்கு வந்து சேர்ந்துவிட் டனர் அபராஜிதாவும் பிரவீனாவும்.... பிரவீனா வுக்கு வயது 4. அவள் பெரிய மனிசி என்ற தோர ணையில் புறு புறுத்துக்கெண்டிருந்தாள்.

அப்பா வேலைக்குப் போவார் - ஆமிக்காரன் பிடிச்சுக்கொண்டு போவான் - அம்மா வேலைக்குப் போவா; ஒவ்வொருநாளும் கொள்ளையா நேரம் காத்திருக்க வேணும் நாங்கள். இப்ப செத்துப் போட்டா - எரிஞ்சுகொண்டிருக்கிறா - எப்ப திரும்பி வருவாவோ தெரியாது."


அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்

குறுகிய காலத்துக்குள் பல்லாயிரக்கணக்கான மக்களின்
நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றுள்ள

## லெய்டன் ஸ்தாபனம்

தொடர்ந்தும் உங்களுக்குப் பல சேவைகளைச் செய்ய முன்வந்துள்ளது.

எமது ஸ்தாபனத்தில் (01. 07. 1992) தொடக்கம் (31. 12. 1992) வரையுள்ள ஆறுமாதகால எல்லைக்குள் ஓடர் நகைகளைச் செய்பவர்களுக்குக் கூலியில்

● 10% கழிவு கொடுக்கப்படும், அத்துடன் ● புதுவருடத்தன்று (01. 01. 1993) அதிஸ்டம்பார்க்கப்பட்டு பல அரிய பரிசுகள் வழங்கப்படும்.

1ம் பரிசு தங்கச்சங்கிலி - 2ம் பரிசு தங்கமோதிரம் - 3ம் பரிசு விலையுயர்ந்த கைக்கடிகாரம்

(ஓடர் நகைகளுக்கான பற்றுச்சீட்டுப் பெறும்போது உங்கள் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் கொடுக்க மறந்துவிடாதீர்கள்)

பரிசு பெற்றவர்களின் விபரம் சீட்டிழுப்பின் பின்னர் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையில் அறிவிக்கப்படும்.
லெய்டன் ஸ்தாபனத்தில் உங்களுக்கு குறைந்த விலையில்
● மளிகைப் பொருட்கள் ● அன்பளிப்புப் பொருட்கள் ● அலங்காரப் பொருட்கள்
● கைக்கடிகாரங்கள் ● சுவர்மணிக்கூடுகள்
மற்றும் உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
கூடுதலான மளிகைப் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கட்கு பொருட்களை தமது இல்லத்திற்கு எடுத்துச் செல்ல இலவச வாகன வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
முக்கிய குறிப்பு: லெய்டன் ஸ்தாபனம், பரிசில் ஒன்றுதான் என்பதையும் அத்துடன் தொடர்புடைய வேறு கிளைஸ்தாபனங்கள், இதே பெயரிலோ அல்லது வேறு பெயரிலோ இல்லை என்பதையும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உரிமையாளர் ப. நாகலிங்கம்

LEYDEN S.A.R.L

60, Rue Louis Blanc - 75010 Paris, M: La Chapelle ou Gare du Nord - Tel: 42 09 92 69




படிப்பகம்

www.padippakam.com

# குங்கும நாயகி

"ஸ்ராட்!. . . . . "

ஒளிப்பதிவுக் கருவி (கமெரா) இயங்கத் தொடங்கியது.

"அக்ஷன். . . . . " நெறியாளரின் (டைரக்டர்) அடுத்த உத்தரவு. ஒளிப்பதிவுக் கருவியின் முன்னால் நின்ற நடிகை நடித்தாள். ஆவேசமான கட்டம் பொறிபறக்க வசனம் பேசினாள்.

"விடமாட்டேன்! என்னுடைய குங்குமத்தை அழித்தவன் எவனாயிருந்தாலும் பழிவாங்காமல் விடமாட்டேன்!. . . . "

"கட். . . . . . " - நெறியாளர்.

திருப்தி. ஒரே தடவையிலேயே காட்சி திருப்தியாய் அமைந்து விட்டது. நெறியாளர் முதல் துணை நடிகர்கள் வரை அனைவருமே நடிகையைப் பாராட்டினார்கள்.

ஆனால், உதவி நெறியாளர் (அசிஸ்டென்ற் டைரக்டர்) பதறியடித்துக்கொண்டு ஓடிவந்தார். நெறியாளரிடம் சொன்னார்: ஸார். . . . . மேக்கப்மான் ஓடிட்டார் ஸார். "

"ஏன் என்ன நடந்தது?"

"எங்களுடைய கீரோயின் (கதாநாயகி) 'என்னுடைய குங்குமத்தை அழித்தவன் எங்கேயிருந்தாலும் பழிவாங்காமல் விடமாட்டேன்' எண்டு பேசியதைக் கேட்டுப் பயந்தடிச்சு ஓடிட்டார்!"

- அங்கதன்.

வாழ்க்கை: ஏணி பாம்பு விளையாட்டு.

பதவி: சங்கீதக் கதிரை ஓட்டம்.

கைவிளக்கு: மின்சாரம் இல்லாத காலத்துக் கதாநாயகன்.

விளக்குமாறு: ஈர்குகளின் கூட்டுறவுச் சங்கம்.

கணவன்: குடும்பச் சிறாப்பர்.

கோழி: சைவர் எடுத்திட்டு நிறையப் புள்ளி எடுத்தவர் போல கூரையில் நின்று பறைசாற்றும் ஜீவன்.

வாய்: வதந்தி பரப்பும் கந்தோர்.

■ ■ ■

பசு: என்ன உன்ரை முதுகில கோடு கோடா இருக்குது?

கழுதை: இப்ப கோடுபோட்ட பேப்பர்தான் சாப்பிடக் கிடைக்குது. அதுதான் இப்பிடி.

"தமிழாலயம்"

அச்சகம் புத்தகசாலை நூல்நிலையம்

ஈழநாடு பத்திரிகை, சிரித்திரு சஞ்சிகை மொத்த விற்பனையாளர்கள்.

10. 07. 1992 முதல் மங்களகரமான ஆரம்பம்

பாரிஸ் மாநகரில் ஓர் அறிவாலயம் அதுவே தமிழாலயம்

■ அறிவை வளர்க்கும் புத்தகங்கள் ■ பொழுதுபோக்கு நாவல் சஞ்சிகைகள்
■ அன்றாட செய்திகளைத் தாங்கிவரும் பத்திரிகைகள் அனைத்துடனும்
■ காகிதாதிகள் ■ வாழ்த்து மடல்கள் ■ பாடசாலை உபகரணங்கள்
■ சிறுவர்களுக்கான புத்தகங்கள் ■ வர்த்தக ஸ்தாபனங்களுக்கான ஏடுகள்
அனைத்துடனும்
■ தரமான அச்சுவேலைகள் ■ அழைப்பிதழ்கள் ■ புத்தகங்கள்
ஆகியவற்றை குறைந்த செலவில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளவும்
அனைத்து தமிழ்ப் புத்தகங்களையும் சிறிய கட்டணத்துடன் படித்துப் பயன்பெறவும்

தமிழாலயம்

21, RUE DE LA CHAPELLE, 75010 PARIS. (Metro: LA CHAPELLE)

TEL: 40 05 14 57



படிப்பகம்

www.padippakam.com

## மேற்கே உதிக்கும் சூரியன்

மேற்குலகமெங்கும் பரந்து வாழும் தமிழ் கூறு மக்களிடையே உள்ள 'சிரித்திரன்' அபிமானிகளின் ஆவல் நாம் நன்கறிந்ததுதான். - கைக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் எம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. 1991 ஐப்பசி - கார்த்திகை இதழிலிருந்து மறுபிரசுரம் செய்யப்பட்டு வருகிறது சிரித்திரன். இப்பெரும் பொறுப்பினை தாமாகவே முன்வந்து ஏற்றிருப்பவர்கள் 'பாரிஸ்' நகரிலிருந்து இயங்கும் தமிழர் ஒருங்கி ணைப்புக் குழுவினர். மேலும், மேற்கு ஐரோப்பிய நாடுகள் முழுவதிலுமே விநியோகிக்கும் நடவடிக்கைகளில் தாம் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சிரித்திரன் மேற்குலகிலும் உதிக்கும். இப்போது திருப்தி தானே!

பிரான்சு நாட்டின் பிரபல ஓவியர் பிக்காசோ 'கேர்னிக்கி நகரின் அழிவு' என்னும் ஓவியத்தை வரைந்து வைத்திருந்தார். ஸ்பெயின் நாட்டின் நகர் கேர்னிக்கி -ஜெர்மன் படைகளால் தரைமட்டமாக்கப்பட்டது.

1944இல் ஜெர்மன் படைகள் பிரான்சின் பாரிஸ் நகரை முற்றுகையிட்டிருந்தன; பல ஜெர்மன் இராணுவ அதிகாரிகள் பிக்காசோவின் ஓவியக்கூடத்தைச் சென்று பார்வையிடுவது வழக்கம்: ஒவ்வொருவரிடமும் தனது 'கேர்னிக்கி நகரின் அழிவு' என்ற ஓவியத்தைக் காண்பித்துக்கொள்வார் பிக்காசோ.

ஒரு தடவை ஜெர்மன் தளபதி ஒருவன் வந்திருந்தான்; 'கேர்னிக்கி நகரின் அழிவு' என்ற ஓவியத்தைக் காட்டி, "இது உங்களால் செய்யப்பட்டதா?" என்று கேட்டான்.

"இல்லை உங்களால் செய்யப்பட்டது!"
- பளிச்சென்று பதிலளித்தார் பிக்காசோ.

## இத்தாலியின் இரவல்

நாவல் (Novel) என்னுஞ் சொல் 'புதுமை' என்னும் பொருளைத் தருவது. நொவாலா (Novela) என்ற இத்தாலிய மொழிச் சொல்லிலிருந்து இது பிறந்தது என்பர். கி. பி. 16ம் நூற்றாண்டிலிருந்து தான் இது ஆங்கில மொழியில் வழக்காட்சி பெற்றது. இச்சொல்லுக்கு கொலம்பியா என்சைக்கிளோபீடியா (The Columbia Encyclopedia), "உரை நடையால் அமைந்த நெடிய கதை" என்று விளக்கம் தருகிறது. வெப்ஸ்ரரின் அகர முதலி (Websters New 20th Century Dictionary) இதனையே சற்று விளக்கி "மனித உணர்ச்சிகள், எண்ணங்கள் அவர் தம் செயல்கள் ஆகியவற்றை விளக்கிக்காட்டுகிற, உரைநடையில் அமைந்த நீண்ட புனை கதை" என்று கூறுகிறது. நாவல் முதலில் இத்தாலி நாட்டில்தான் தோன்றிற்று. அப்போது அது பெரும்பாலும் காதல் நிகழ்ச்சிகளையே சித்தரிப்பதாய் இருந்தது. ஆதலின், நாவல் என்னும் சொல் ஆதியில், 'றொமான்ஸ்' (Romance) என்னும் பொருளில் தான் வழங்கப்பட்டது. நாவலைப் 'புதினம்' (நவீனம்) என்று குறிக்கும் வழக்கம் தமிழில் உண்டு.

- நன்றி: தீபம் (ஒகஸ்ற்-1970)

■ ■ ■

- சுறுசுறுப்புடன் வேலை செய்துவரும் தேனீக்களுக்கு அழுவதற்கு நேரமில்லை!
- எண்ணங்களின் குழந்தைகள்தான் ஏழ்மையும் வறுமையும்!
- முதலில் மனதிற்கு வைத்தியம் செய்யுங்கள்; அதற்கப்புறம் வியாதிக்குச் செய்யலாம்!
- கெட்டவழிகளில் கிடைக்கும் லாபமானது நட்டத்திற்குச் சமமானது.
- போர்களின் போது கொல்லப்பட்டவர்களைக் காட்டிலும் கவலையலால் மாள்பவர்களின் எண்ணிக்கை அதிகம்.

● ● ●



Mrs. டாமோடிரன்: டார்லிங்
Mr. டாமோடிரன்: யேஸ் டார்லிங்.
Mrs. டாமோடிரன்: வட் இஸ் உளவாரம்.
Mr. டாமோடிரன்: அது எங்கட பலகாரம் மாதிரி ஒரு ஸ்வீட் மீட்.
Mrs. டாமோடிரன்: அப்போ என்னுடைய பேர்த்டேய்க்கு உளவாரம் வாங்கித் தார்றீங்களா?

## ஹைக்கூ கவிதைகள்

துப்பாக்கி வேட்டுக்கள்
தூரத்தில் கேட்கின்றன.
மரணம் பக்கத்தில்!

● ● ●

ஆள்பவர்கள்
அவர் தம் அதிகாரிகள்
அனைவரும் உத்தமர்கள்
வானொலியில் வார்த்தைகளில்!

- மையோன்.



படிப்பகம்

www.padippakam.com

# நேயம் நயந்தவை

(வாசகர் கடிதம்)

● ஆசிரியர் அவர்கட்கு!

தை - மாசி சிரித்திரன் இதழ் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. ஒரு கையில் தாலியுடனும் மறு கையில் மணமாலையுடனும் மணமகனைத் தேடிப் பறக்கும் இன்றைய தமிழ்ப் பெண்களின் அவலநிலையை மட்டையிலேயே எடுத்துக்காட்டியது மனதிற்கு நிறைவைத் தந்தது. 'சுதாராஜ்'ஜின் சிறுகதையை அணு அணுவாக இரசிக்க முடிந்தது. மகுடியாரின் பல பதில்கள் சிந்தனையைத் தூண்டுவதாய் அமைந்திருந்தன. ஒரு உண்மைக் கலைஞனை நோயோ, நொடியோ ஒப்பாத சூழ்நிலையோ அடக்கி அமுக்கிவிட முடியாது என்பதற்கு நீங்கள் நல்ல உதாரணம். தொடரட்டும் உங்ககள் பணி.

**Dr. எம். கே. முருகானந்தன்.**
மெயின் ஸ்றீற், பருத்தித்துறை.

■ ■

● சிரித்திரன் தை - மாசி இதழ் கண்டேன். மகுடி பதில்கள் சிரிப்புடன் சிந்திக்கவும் வைத்தது. சுவை மீட்டல், வீடியோ வாய்மை அம்சங்கள் நல்லாக இருந்தன. சிரித்திரனை ஒவ்வொரு மாதமும் வெளியிட வேண்டும்.

**நாகமணி மகேந்திரலிங்கம்.**
7ம் வட்டாரம், சங்கானை.

■ ■

● **சிரித்திரன் ஆசிரியருக்கு**

தை - மாசி இதழ் பார்த்தேன். 'நிலைக்கட்ணாடி' கலை மலர் முகிழ்கிறது நன்றாக இருந்தது. "போகும் இடம்" சிறுகதை இப்போது சமூகத்தில் நடைமுறையில் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. மொத்தத்தில் எல்லா விஷயமும் ரசிக்கக்கூடியதாக இருந்தது.

**சிவனடியார் இரஞ்சன்.**
பொன்னம்பலம் இல்லம், மானிப்பாய்.

■ ■

● ஆசிரியர் அவர்கட்கு!

முதற்பக்கம் முதல் கடைசிப் பக்கம் வரை பிரமாதம். 'சிரிகதை' இரண்டும் நன்றாக இருந்தன. வாசித்ததும் சிரிப்பை அடக்க முடியவில்லை. சிரிப்புடன் சிந்தனையைத் தூண்டும் விஷயங்கள் போர்க்காலச் சூழ்நிலைக்கேற்ப உங்கள் இதழில் வருகின்றன. நீங்கள் பல்லாண்டு வாழ எமது ஆசிகள்.

**சிவபாலன், மனோ, தர்மினி.**
கண்டிறோட், சாவகச்சேரி.

● **சிரித்திரன் ஆசிரியர் அவர்கட்கு!**
கனம் ஐயா!

தங்களின் தை - மாசி சிரித்திரன் வெளியீட்டில் பிரசுரமான "போகும் இடம்" என்னும் சிறுகதை வாசித்தேன். கதையின் கதாபாத்திரமாக அமைந்த அம்மாவின் பாத்திரமும் எமது நிலையும் பெரும்பாலும் ஒரேமாதிரியாக அமைந்துள்ளது. அத்துடன் கதை ஆசிரியர் தமிழீழ மக்களுக்கு எளிதில் விளங்கக்கூடியதாக மிக எளிய தமிழிலும் யாழ்ப்பாணத்தவர் நடைமுறையிலும் கதையைப் படைத்துள்ளனர். ஆகவே கதை ஆசிரியரைப் பாராட்டவேண்டும் போல் எனது எண்ணம் தூண்டியதனாலேயே இக் கடிதத்தை தங்களுக்கு எழுதுகின்றேன். கதை ஆசிரியருக்கும் சிரித்திரன் ஆசிரியருக்கும் எனது பாராட்டுக்கள்.

இதே பதிப்பில் அறுகம் புல்லுடன் பேட்டி கண்டுள்ளார் "பேட்டி வைத்தியர்" ஆசிரியர் திரு. ஆ. க. செல்வநாயம். சாதாரணமாக றோட்டிலும் காலிலும் மிதிபடும் அறுகின் பெருமையையும், மக்கள் அதை எப்படி எல்லாம் பல நோய்களுக்கு பாவிக்கமுடியும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார். இதேபோன்று மூலிகைகளுடன் அவர் பேட்டிகண்டு மூலிகைகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவேண்டும் என்றும் இதனால் மக்கள் பலன் அடையமுடியும் என்றும் நம்புகின்றேன். ஆகவே அவர் தொடர்ந்து இப்பணியில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவருக்கும் இதை பிரசுரிக்க உதவிய உங்களுக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

**த. சம்பந்தர்.**
அழகியவான் தோட்டம்,
கோப்பாய் தெற்கு.

■ ■

● **சிரித்திரன் ஆசிரியர் அவர்கட்கு!**
ஐயா!

தங்கள் தை - மாசி இதழில் பேட்டி வைத்தியம் என்ற பகுதியில் வெள்ளைக்கு நிவாரணம் எழுதியிருந்தீர்கள். இதில் குறிப்பிடப்பட்ட அறுகு பால் அறுகா, அல்லது சாதாரண அறுகா? சமூலம் என்றால் என்ன? இதனை எவ்வாறு மிளகிற்குச் சமனாக எடுப்பது? இதனைச் சாப்பிட்டால் முறிவிற்கு ஏதாவது சாப்பிட வேண்டுமா? பத்தியம் எந்த வகையில் இருக்கவேண்டும்? இவை எல்லாவற்றிற்கும் போதிய விளக்கமளிக்கும் வண்ணம் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

நான் இந்த நோயால் 6 வருட காலமாகப் பாதிக்கப்பட்டு எத்தனையோ மருந்துகள் செய்தும் பயன் அளிக்கவில்லை. எனக்கு வயது 33 வருடங்கள். எனவே இந்த மருந்தைச் சாப்பிட எண்ணியுள்ளேன். இம்மருந்தினைச் சாப்பிடுவதால் வேறு பாதிப்புக்கள் ஏற்படுமா?
நான் சிரித்திரன் இதழை தவறாது வாசிக்கும் ஒரு அபிமானி. தங்கள் முயற்சி தொடர வாழ்த்தி எனக்கு இதற்கு விளக்கம் அளிப்பீர்கள் என நம்புகிறேன்.

ஜெயா
"திருத்தணிகை"
மானிப்பாய்.

**ஜெயா அவர்களே! தங்கள் வினாக்களிற்கு சம்பந்தப்பட்ட கட்டுரையாசிரியர் விளக்கம் தந்துள்ளார்:**

"சிரித்திரன் தை - மாசி இதழில் சாதாரண அறுகினைப் பற்றித்தான் எழுதப்பட்டது. தளை, தண்டு, வேர் எல்லாம் சமூலம் என்று குறிப்பிடப்படும். அச்சுப்பிழையினால் சமூலம் என்பது (5மூலம்) என்று அச்சானதிற்கு வருந்துகிறோம். சமூலத்திற்கு சமபங்காக மிளகினை எடுப்பதானால் சமனெடையாய் எடுக்கலாம். உதாரணமாக 10 கிராம் சமூலத்திற்கு 10 கிறாம் மிளகு என்றவாறு பத்திரிகையில் குறிப்பிடப்பட்டது போல் சுட்டபுளி, வறுத்த உப்பு என்பவற்றை மருந்து பாவிக்கும் காலத்தில் பத்தியமாகப் பாவிக்கலாம். மருந்துண்ணும் காலங்களில் உப்பு, புளி என்பவற்றைப் பாவிக்காமல் விடுவது மிக நல்லது. மருந்து முறிவிற்கு எதுவும் பாவிக்கவேண்டியதில்லை."

- ஆசிரியர்.

■ ■ ■

## திலகவதிகள்

பம்பாயில் 'டோரபிரலாவா' அருகாமையில் உள்ள மைதானத்தில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேடையில் அவரது படையணித் தலைவர்கள் பலரும் இருந்தனர். கூடியிருந்த பெண்கள் தமது விரல்களை வெட்டி வழிந்த குருதியில் அவர்கள் அனைவருக்கும் இரத்தத் திலகம் இட்டனர். எனது நண்பரிடம் 'அதன் அர்த்தம் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னது: 'எங்களை உங்கள் சகோதரிகளாக ஏற்று பெண்குலத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு உங்களுடையது என்பதுதான்'.



"மடமையைக் கொளுத்துவோம்" கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்ற செல்வி ஆதிலட்சுமி இராசையாவுக்கு மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா அவர்கள் பரிசு வழங்கும் காட்சி. இந்நிகழ்ச்சி சிரித்திரன் காரியாலயத்தில் இடம்பெற்றது.

### தலைகீழ் நியதி

**சின்னவன் துறவி**
**செருக்களம் செல்ல**
**பெரியவர் பாவி**
**சாவுக்கு அஞ்ச**
**கலியினில் நியதிகள்**
**தலைகீழ் தலைகீழ்.**
**காவோலை மரத்தினில்**
**கலகலத்திருக்க**
**குருத்தோலை நிலத்தினில்**
**பொலபொலத்துதிர**
**கலியினில் நியதிகள்**
**தலைகீழ் தலைகீழ்!**

**- அம்மையப்பன்**



படிப்பகம்

www.padippakam.com

# முடத்தெங்குகள்

பங்குனி வெயில் அனலெனத் தகதகத்துக்கொண்டிருந்தது. உடலும் உள்ளமும் கொதிக்க குமாரசாமி வார்த்தைகளைச் சரமாரியாக் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார்.

இண்டைக்கென்ன சகுனத்திலை மனுசன் முளிச்சுதோ... பழஞ்சீலை கிழிஞ்சமாதிரிச் சும்மா தொடர்பில்லாமல் புறுபுறுத்துக்கொண்டிருக்குது என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் செல்லம்மா.

"என்ன குமாரசாமியர் இண்டைக்குச் சூடாய் இருக்குமாய்ப் போலை கிடக்குது. என்ன சங்கதி" என்றவாறு அருணாசலம் மாஸ்டர் வந்து சேர்ந்தார்.

"என்ன மாஸ்டர், செய்யக்கூடாததுகளைச் செய்தால் சூடுபிறக்காமல் என்ன செய்யும்? வேறை ஒண்டுமில்லை இப்ப பெண்டுகள் இராச்சியமாப் போச்சு. அதுதானே இந்தளவு கஸ்டங்களெல்லாம் நடக்குது நாட்டிலை" என்று தன் மனக்கொதிப்பை மேலும் உணர்த்திக்கொண்டார் குமாரசாமி.

"ஏன் உங்களுக்கு மோன்ரை கலியாணம் திருப்திப் படயில்லையோ?" என ஒரு கேள்வியைப் போட்டார் அருணாசலம் மாஸ்டர்.

"எரியிற நெருப்பில எண்ணெய் வார்த்தது போல ஆகிவிட்டது நிலைமை."

கலியாணத்துக்கு குமாரசாமியர் போகவில்லை. குடும்பத்திலுள்ள எல்லோருமே போய் கொழும்பிலேயே கலியாணத்தை முடித்துக்கொண்டு நேற்றுத்தான் திரும்பி இருந்தனர்.

கலியாண விசயங்களை அறிந்துகொள்ளவென்றுதான் அருணாசலம் மாஸ்டர் வந்திருந்தார். ஆனால் குமாரசாமியின் இந்தக் கோபமும் கொக்கரிப்பும் புரிந்துகொள்ள முடியாதிருந்ததாலோ என்னவோ நிலைமையை அறிய அவர் மெல்லத் தூபமிட்டுவிட்டார்.

"கனடாவிலை இருந்து இஞ்சைவந்து கலியாணத்தைச் சிறப்பாகச் செய்வம்மெண்டுதான் மாஸ்டர் என்ரை மோன் கடிதமெழுதினவன். இவ..... என்ரை மூத்தபுத்திரி....யும் தாயுமாகச் சேர்ந்து "இஞ்சை நீ வந்தால் ஐஞ்சுபவுணோ ஆறுபவுணோ குடுத்துத்தான் கலியாணம் செய்யவரும். அந்தப் பவுண் காசைக்கொண்டே கொழும்பிலை கலியாணத்தை முடிச்சுப் போடலாம்" என்று இவை அவனுக்குப் பதில் எழுதி இருக்கினம் பெரிய நிபுணியள்."

"மோனும் அப்பிடியே கொம்பிலை வைச்சுக் கலியாணத்தை முடிச்சுக்கொண்டு போட்டான் தானே, இனி இதுக்கொரு கதை கதைச்சு ஏன் வீணாக மனம் நோகிறியள்" இது அருணாசலம் மாஸ்டரின் விண்ணப்பம்.

"அதுகில்லை மாஸ்டர், கொழும்புக் கலியாணச் செலவு தொண்ணூற்றெட்டாயிரம் முடிஞ்சிருக்காம்."

அருணாசலம் மாஸ்டர் விழிகளை உயர்த்திக் கொண்டார்.

"ஐஞ்சுபவுண் குடுத்தாலும், இஞ்சை சொந்த வீட்டிலை இனசனத்தோடை நாலு பெரிய மனிசர் ஆசீர்வாதம் செய்ய நடத்த வேண்டிய கலியாணத்தை, ஆருமற்ற அனாதைகள் போல ஹோட்டல்லை வைச்சுக் காசைக்கொட்டி...... ஆராருக்கோ காசை அளந்து கலியாணம் செய்தால்..." வார்த்தைகள் பொரிந்து தெறிக்க குமாரசாமியர் அருணாசலத்தைப் பார்த்தார்.

சே!.... குமாரசாமியர் சொல்வது நியாயம் தான். இந்தச் சனங்களெல்லாம் இப்படித்தான் முன்யோசனை இல்லாமல் எங்கடை காசை அநியாயமாக ஆருக்கேன் குடுத்திட்டு பெரிசாகத் தம்மைக் காட்டிக்கொள்வதில் பெருமைப்படுகிறார்கள். வெறும் போலிகள் என்று நினைத்துக்கொண்டார் அருணாசலம் மாஸ்டர்.

"சும்மா சொல்லப்படாது மாஸ்டர் இதுகள் எல்லாம் கொழும்பில நடத்தினது கொழும்புக் கலியாணம் - இஞ்சை எங்கடை தேசத்துக்கான ஒரு போரை அவங்கள் நடத்திக்கொண்டிருக்கிறதாலை தான் கனடா, பிரான்ஸ், சுவிஸ் என்று போய், ஆராரோ செய்த தியாகங்களாலை பெருமையைச் சம்பாதிக்கினம். இஞ்சை கலியாணம் நடத்தியிருந்தால் இவ்வளவு செலவு வருமா மாஸ்டர்? வெறும் கானலை நம்பி ஓடுற மான் கூட்டம் போல இவை போய் கானல் கல்யாணம் செய்தால் இவையளை வாழ்த்தாமலா விடலாம்?" என்று கேள்வியோடு நிறுத்தினார் குமாரசாமியர்.

" ஆறுபவுன் குடுத்து தன்ரை தேசத்திலை இனசனத்தோடை நாலு பெரிய மனிசரோடை செய்திருந்தால் இருபத்தைஞ்சு மிஞ்சியிருக்குமோ இல்லையோ? இதைவிட்டிட்டு தண்ணி ஊத்தி வளர்த்தவனை விட்டிட்டு வளைஞ்சு வளைஞ்சு வேலிக்கப்பால் தலைநீட்டி அடுத்த வளவுக்குள்ளை வருமானங்கொடுக்கும் முடத்தெங்காக" - எங்கடை சனங்கள் போறதும் செய்யிறதும் எப்ப புரியப் போகுதோ.

அருணாசலம் மாஸ்டர் குமாரசாமியின் கோபத்திற்கும் கேள்விக்குமான காரணத்தை விளங்கிக்கொண்டு, இதுகள் முடத்தெங்குகள்தான்.... என்று இழுத்தவாறு எழுந்து சென்றார்.

குமாரசாமியார் யோசனையில் ஆழ்ந்தவராக அப்படியே கட்டிலில் சரிந்தார். ■ ■

**வளவைவளவன்**



படிப்பகம்

www.padippakam.com

# கழுதைக் கதை

ஒரு நாள் முல்லாவின் தெருவில் வசிக்கும் இளைஞன் ஒருவன் அவரிடம் வந்து "ஐயா தங்கள் கழுதையை ஒரு நாளைக்கு வாடகைக்கு கொடுக்க முடியமா?" என்று கேட்டான்.

அவனிடம் தன் கழுதையைக் கொடுக்க விரும்பாத முல்லா, தன்னுடைய கழுதை வீட்டில் இல்லை என்று கூறிவிட்டார்.

திரும்பிப் போக இளைஞன் எத்தனித்தான். வீட்டினுள்ளே இருந்து கழுதை கத்தியது. உடனே அவன் 'ஐயா, தங்கள் கழுதை வீட்டில் இல்லை என்றீர்களே? உள்ளே கத்துகிறதே?" என்று நச்சரித்தான்.

அதற்கு முல்லா சொன்னார்: ஆமாம் இல்லையென்று தான் சொன்னேன். ஆனால் இளைஞனே நீ மனிதனைக் காட்டிலும் கழுதையைத்தான் நம்புகிறாய்; உன்னைப் பார்த்து உலகம் சிரிக்கப் போகிறது. போ!. . . . போய் வா!. . . . .

■ ■ ■

## அலுவலகத்திற்கும் அகத்திற்கும்

அலுவலக நேரம் 8. 30 மணி; அந்த அலுவலரோ 9. 30 மணியாகியும் பையப்பைய நடந்து சென்றுகொண்டிருந்தார். கண்ட சவாரித்தம்பரிற்கு குழப்பமாய் இருந்தது. 'நத்தை வாகனத்து நாயகரே!' என்றுதான் கூப்பிடவேண்டும் போலிருந்தது; ஆனாலும் "தம்பி" என்றார். "இவ்வளவு நேரமாகுது ஆறுதலாய் நடக்கிறீரே?"

அலுவலர் சொன்னார்: "எங்கடநிர்வாகி நல்லவர்; பிந்திப் போனாலும் ஒண்டும் பறைய மாட்டார். "

மாலைப் போதில் - அலுவலகம் முடிந்து அந்த அலுவலர் வேட்டோசை கேட்ட காகம் போல் பறந்தடித்து வந்தார். - வேர்க்க விறுவிறுக்க ஓட்டம் ஓட்டமெனப் பரபரத்தார். எதிர்ப்பட்ட சவாரித்தம்பர் கேட்டார்: "என்ன தம்பி, காலையில அன்னவாகனமாய் அப்பிடிப் போனீர்; இப்ப - நாய்வாகனமாய்ப் பாய்ஞ்சு பாய்ஞ்சு வாறீர்?"

அலுவலர் ஓடிக்கொண்டே சொன்னார்: "நிக்க நேரமில்ல; கதைக்க காலமில்ல! வீட்டைபோக ஒரு நிமிசம் பிந்தினாலும் மனிசியிட்டத் தப்பேலாது!


உங்கள் வசதிக்கு... உகந்த இடம் லா சப்பலில்

**கொன்கோட் சேவிஸ்**

**மொழிபெயர்ப்பு நிலையம்**

CONCORDE SERVICE CSt FRANCE BUREAU DU TRADUCTION

பிரெஞ்சு, ஆங்கிலம், ஜேர்மன், தமிழ் மொழிபெயர்ப்பு வேலைகளை பிந்தாமல் செய்து தந்து உங்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவர்கள்

- சட்ட சம்பந்தமான ஆலோசனைகள்
- சட்டத்தரணிகளை ஒழுங்கு செய்தல்
- மொழிபெயர்ப்புக்கு துணை வருதல்
- வேலையிடத்துப் பிரச்சனைகளைச் சீர்செய்தல்
- இமிகிரேசன் ஆலோசனைகள்
- வீட்டுப் பிரச்சனைகட்கு சட்டரீதியான ஆலோசனைகள்
- சகல நாடுகளுக்குமான FAX செய்தித் தொடர்புகள்
- இன்னும் உங்கள் தேவைகளுக்கு

சேவைகள் வழங்கக் காத்திருக்கிறார்கள்
கொன்கோட் சேவிஸ்

செலவு குறைவு — திறமை மிகும்
சேவை நிறைவு — திருப்தி தரும்

அலுவலக நேரம்:
காலை 10. 00 மணி - பிற்பகல் 1. 00 மணி — மாலை 3. 00 மணி - இரவு 8. 00 மணி
(அலுவலகம் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் திறந்திருக்கும்)

CONCORDE SERVICE

Bureau de Traduction
24, Rue Perdonnet, 75010 Paris.
Metro: La Chapelle ou Gare du Nord.
Tel: 46 07 91 99 Fax: 40 38 13 89




படிப்பகம்

www.padippakam.com

## காயமே இது பொய்யடா

1984 ஆம் ஆண்டு காசி ஆனந்தனின் சகோதரர் சிவஜெயத்துக்கு நேர்ந்த அனுபவம் இது. ஒருநாள் மாந்திரீகத்தில் பெயர்போன ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவருடன் உரையாடிவிட்டுப் புறப்படும்போது அவர் இவருக்கு ஒரு தாயத்தை வழங்கினார். "தம்பி இத இடுப்பில கட்டுங்க: உங்களுக்கு எந்த ஆபத்துமே வராது; அப்பிடி ஏதும் வாறதெண்டா இந்த தாயத்துக் காட்டும்" என்றார். அதன்படியே இவரும் அதை வாங்கி இடுப்பில் கட்டினார்.

சில நாட்களுக்குப் பின் புல்லுமலை என்ற இடத்திற்கு இவர் செல்ல நேர்ந்தது. அங்கிருந்து திரும்பி வரும் வழியில் இராணுவத்தினர் இவரைக் கைதுசெய்தனர். கல்லடியில் இருந்த பிரதான இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கு இவரைத் தலைகீழாகக் கட்டித் தூக்கினர்; நிர்வாணமான நிலையில் தாக்கினர். சித்திரவதைகளெல்லாம் முடிந்ததும் ஒரு அறைக்குள் தூக்கிப் போட்டனர்.

சிறிலங்கா அரசபடைகளிடம் அடிவாங்குவதில் நீண்டகால அனுபவம் இவருக்கு. எனவே அந்தச் சித்திரவதைகள் பெரிய பாதிப்பினை ஏற்படுத்த வில்லை. எனினும் இவருக்கு அந்த மாந்திரீகவாதி வழங்கிய தாயத்தின் நினைவு வந்தது. "ஆபத்து வாறதெண்டா தாயத்து காட்டுமென்று சொன்னாரே என்று நினைத்தபடி, அதை முன்பக்கமாக எடுத்துப் பார்த்தார் ஆம்... தாயத்து நெளிந்திருந்தது.

## சுடர்விட்ட (சாவித்)திரி

சித்திரை வருடத் திருநாளன்று கம்பன் கழகத்தினர் கம்பன் தோட்டத்தில் பஞ்சாபிகேசன் குழுவினரின் நாதஸ்வர இசையையும் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகத்தையும் கலை விருந்தாக வழங்கினர்.

பழம்பெரும் இசைநாடக நடிகர்கள் 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தை சுருக்கி அமைத்து நடித்தார்கள். அந்த நாடகத்தில் அரியாலையூர் வி. செல்வரத்தினம் சாவித்திரியாக அற்புதமாக நடித்தார் என்று கூறுவதை விட சாவித்திரியாகவே எல்லோர் இதயங்களிலும் நடமாடினார் என்றே சொல்லவேண்டும்.

சாவித்திரிக்குரிய தோற்றம், குரல், பாட்டு, நடிப்பு இவற்றின் அழகுகளெல்லாம் உண்மையில் ஒரு தேர்ந்த பெண் நடிகைதான் நடிக்கிறாள் என்று பலரை நம்பச் செய்துவிட்டன. நந்தவனக் காட்சி அழகில் சாவித்திரி "பூங்கொடிமேல் வளர் புது மலர் கண்டு ரீங்காரம் செய்திடும் வண்டு" என்று பாடிய பாட்டும் நடிப்பும் ரசிகர்களை ரசனையின் உச்சத்திற்கே அள்ளியெடுத்துவிட்டது. அப்பாட்டில் அவர் "பாசமிகுந்திடும் பாங்கியரே.... அன்னமே..... வாராய்...... என்ற சொற்களை ராக லயத்திலே தோய்த்து தானும் அதிலே லயமாகி நடித்த அருமைப்பாடு, இன்னும் இதயத்தில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிறது.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் தாமரை, வண்டு, அன்னம், பூஞ்சோலை, பூங்கொடி, மெல்லியல் மாதர் பற்றியெல்லாம் வண்ணத் தமிழில் வர்ணித்திருக்கிறார். அந்த வண்ணத் தமிழானது வண்ணக் காட்சிகளாக அன்று கம்பன் கோட்டத்திலே வந்து பொலிந்து விட்டனவோ என்ற இன்பக் கிளர்ச்சி ஏற்பட்டது. பூரித்த முகங்களோடு இந்த நாடகத்தைப் பார்த்த பலர் இப்படியான கலைஞர்கள் நம்மத்தியில் இருக்கிறார்களே இவர்களுக்கு நாம் என்ன செய்துவிட்டோம் என்று பேசிக்கொண்டார்கள்.

- நவாலியூர் நடேசன்


பாரிஸ் மாநகரில் பாண்டித்தியம் பெற்ற
தொழிலாளர்களின் சேவையில்



சகானா
சலூன்



உங்கள் வரவு நல்வரவாகுக! எங்களின் சேவை உங்களை மகிழ்விக்கும்

ஆண், பெண் அனைவருக்கும் சிகை அலங்காரம் செய்து கொள்ளவும்,
தலைக்கு நிறம் (DYING) பூசிக்கொள்ளவும், தலைமுடி சுருட்டிக் (CURLING) கொள்ளவும்.

SAGANA
COIFFURE
64, Rue LOUIS BLANC, 75010 PARIS.
Metro: LA CHAPELLE ou GARE DU NORD.




TEL:
42 05 16 16




படிப்பகம்

www.padippakam.com

# கதையின் வசனம்

கதை: காலம் உனக்கொரு பாட்டெழுதும்
எழுதியவர்: ரஞ்சகுமார்

சுலோ அக்கா வீட்டுக்கு இவன் கடைசியாகப் போன நாளே மறந்துவிட்டது. அத்தான் முணுமுணுத்தபடி சட்டென முகத்தைத் திருப்பிக்கொண்டு போனான். இந்த அத்தான் சரியான ஒரு சேற்று எருமை. 'காட்ஸ்' அடிக்கிறதையும், கடமைக்காக ஏதோ வேலைக்குப் போவதையும், மீதி நேரமெல்லாம் ஒரே குடியையும் தவிர இவன் எதைச் சாதித்தான்? சுலோ அக்காவை வருஷம் தவறாமல் அம்மாவாக்குறதில் மட்டும் சமர்த்தன். சுலோ அக்கா இதழ்கள் வெடித்து மார்பு வற்ற வதங்கிய கத்தரிக்காய் போல ஆகிவிட்டாள். அத்தான் மீண்டும் ஏதோ வாய்க்குள் 'கசமுச' என்றான். போனால் போகட்டுமே! இவன் அக்காவைப் பார்க்கத்தானே வந்தான்.

"இருக்கிறதுகளுக்கும் வீண் கரைச்சல்.."

அத்தான் வெளிப்படையாகவே கொக்கரிக்க ஆரம்பித்தான். அக்கா நாக்கைக் கடித்தபடி இவனை குசினிக்குள் இழுத்துப் போனாள். இவன் கைகளை விடாமல் இறுகப் பிடித்துக்கொண்டேயிருந்தாள்.

"சாப்பிடுறியாடா" தளதளக்கக் கேட்டாள். இவன் நிமிர்ந்து பார்க்க சக்தியற்றுப் போனதால் மௌனமாக உட்கார்ந்தான். அக்கா மளமளவென்று சாப்பாடு போட்டாள். பிசைந்து பிசைந்து கைகளில் கொடுக்க ஆரம்பித்தாள்.

அக்கா மூக்கை உறிஞ்சுவது கேட்டது.

"அம்மா கோவிலுக்குப் போவதை விட்டுட்டா...."

"......."

"அம்மா கோவிலுக்குப் போறதையும் விட்டுட்டாடா...."

"....."

" அம்மா கோயிலுக்கு..." அக்காவின் குரல் உணர்ச்சி வேகத்தில் உடைந்து கீச்சிட ஆரம்பித்தது.

இவன் கையை உதறிவிட்டு வேகமாக வெளியே போக ஆரம்பித்தான்.

"கையைக் கழுவிவிட்டுப் போடா..." அக்கா கடைசியில் அழுகை வெடிக்கிற குரலில் அழைத்தாள். இவன் திரும்பிப் பார்க்க விருப்பமில்லாமல் கைகளை இறுகப் பொத்தியபடி காற்றைக் குத்தியபடி போனான்.

அக்கா குமுறிக் குமுறி அழைத்தபடி இவன் பின்னே வரும் அரவம் கேட்டது. காதைப் பொத்திக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

"இனிமேல் ஒரு வீட்டுக்கும் போகமாட்டேன்." இவன் காற்றுக்குச் சபதம் செய்து கொடுத்தான்.


ஹரே கிருஷ்ணா

இப்பொழுது கிடைக்கும்

## பகவத் கீதை
## உண்மையுருவில்

(தமிழ் பதிப்பு)

**மிகவும் சிறந்த, முழு விளக்கம் பெற்ற பதிப்பு!**
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் போதித்தபடியே!!**
**தெய்வத்திரு A.C. பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவின் விரிவுரையுடனானது.**
**700 பக்கங்களுடன்**
**16 கலர் படங்களுடன்**

**கனமான அட்டையோடு புத்தகம் கிடைக்கும்.**
**23 சுவிஸ் பிராங்குகள் (சுவிஸ், ஐரோப்பிய நாடுகளுக்கு அஞ்சல் செலவு உட்பட)**

## பகவான் கிருஷ்ணர் உங்கள் வீட்டிலும் தோன்றுவார்

சிந்தனையுள்ள ஆத்மீக வாழ்வுக்கான ஞானதர்சனம் பத்திரிகையைப் படிக்கத் தொடங்கும் பொழுது:-

நாங்கள் எல்லோரும் உணர்ந்துகொள்கிறோமோ, இல்லையோ ஞானத்தை எதிர்பார்க்கிறோம். எல்லாப் பிரச்சனைகளிலிருந்தும் விடுபட்டு நிம்மதியையும், ஆனந்தத்தையும் மட்டும் வழங்கும் ஒரு சூழ்நிலையை அடைவது எப்படியென்று தெரிந்துகொள்ள விரும்புகிறோம். நாங்கள் பூரண நிம்மதிக்கும் ஆனந்தத்திற்கும் தகுதி உடையவர்களாய் இருந்தும் எப்படி பெறுவது என்று புரியாது இருக்கின்றோம். நாம் இருளில் இருப்பதாக எண்ணிக்கொள்கிறோம். வாழ்க்கையின் பிரச்சனைகளுக்கு தீர்வு தேடும்போது எங்களுக்கு தவறான தகவல்கள் தற்காலிகமான தீர்வுகளையே வழங்குகிறது.

ஞானதர்சனம் இன்றைய பிரச்சனைகளின் அடிப்படைக் காரணங்களை வெளிப்படுத்துகிறது. ஆன்மீக விளக்கத்தை தருகிறது. ஞானதர்சனம் நீண்டகால ஏட்டினை படிப்பதன் மூலம் தெளிவாகி ஞானம் அடையுங்கள்.

ஆண்டு சந்தா விபரம்:-(தபால் செலவு உட்பட),
உள்நாடு: SFr 21.00, இதர நாடுகள்: SFr 25.00

அனுப்பவேண்டிய முகவரி:-
SWISS - TAMIL SRI KRISHNA SOCIETY. POSTFACH 116, 8030 ZURICH, SWITZERLAND.




படிப்பகம்

www.padippakam.com

# பின் சிரிப்பு



"சோதனைக்கு இன்னும் இரண்டு கிழமை தான் இருக்கு; பிள்ளை நாவல் வாசிக்குது!"

"பொறுங்கோ அம்மா, கதாநாயகியைக் கடத்திப் போட்டாங்கள்; முடிவைப் பாப்பம்."

"கடத்திப் போட்டாங்களோ?..... நல்ல பிள்ளை.... வாசித்து முடிவைச் சொல்லு."

■ ■ ■

**ஆசிரியர்:** காற்றுள்ள போது.....
**மாணவன்:** தவிடு விற்காதே

■ ■ ■

**இளைஞன்:** உங்கட இசைக்குழுவில நானும் அங்கம் வகிக்க விரும்புறன். இதுக்கு என்ன அடிப்படைத் தகுதியை எதிர்பார்க்கிறீங்கள்?
**இசையமைப்பாளர்:** முதலாவது சயிங்கம் சப்பத் தெரிஞ்சிருக்கவேணும். இரண்டாவது நிகழ்ச்சி நடக்கிறபோதே வாத்தியம் வாசிச்சபடி அருகில இருக்கிறவரோட அழகா சிரிச்சுக் கதைக்கப் பழகியிருக்கவேணும்.

■ ■ ■

## புத்திர சோகம்

அன்புள்ள மகனுக்கு,

உன்னைப் பத்துமாதம் நொந்து சுமந்து பெற்ற எனக்குப் பத்துவரிக் கடிதம் எழுதி கை நொந்துவிடின் தயவுசெய்து எழுதாமல் விடவும்.

இப்படிக்கு
**அன்புள்ள தாய்**



**கனகம்:** ஒரு மாதிரி ஆமியிட்ட தப்பி வந்திட்டீங்கள். அங்கை ஊரில எங்கட வீட்டை எட்டிப் பார்த்தனீங்களோ?
**பூமணி:** உங்கட வீட்டில கூறையை வாளியில கட்டிப்போட்டு தண்ணி அள்ளுறாங்கள்.

■ ■ ■



"இந்த இடிதாங்கி மாதிரி குண்டுதாங்கி ஒன்றைக் கண்டுபிடித்தாலென்ன!"

"எங்கட பெடியள் கண்டுபிடிப்பாங்கள். அவசரப்படாதை."

■ ■ ■

**ஆசிரியர்:** மனிதன் தலைநிமிர்ந்து நிற்பது எப்போது?
**மாணவன்:** ஷவர் பாத்தில் குளிக்கும் போது.

■ ■ ■

**ஒருவர்:** எங்கட அரசியல் வாதிகள் ஏழில் செவ்வாய்க்காரரோ?
**மற்றவர்:** ஏன்?
**ஒருவர்:** அரசியல் பேச்சுவார்த்தை கல்யாணப் பேச்சு வார்த்தை மாதிரி இழுபடுகுது.

■ ■ ■

**ஒருவர்:** குதிரை ஓடிப் பாஸ் பண்ணினால்....
**மற்றவர்:** கதிரையில் இருந்து குதிரை விடுவார்.



படிப்பகம்

www.padippakam.com


"கண்கவர் தங்க நகைகளின் மாளிகை"

# சோபிகா
## ஜீவல்ஸ்



அனைத்துரக நகைத் தேவைகளையும் குறுகிய காலத்தவணையில்
கலைநுணுக்கத்துடன் கூடிய தொழிநுட்ப கலைஞர்களின்
கைவண்ணத்தில் கல்அட்டியல், பதக்கம், தோடு, சிமிக்கி முதல்
திருமண நகைகள் மற்றும் உங்கள் தேவைகள் எதுவாயினும்
நம்பிக்கையுடன் பூர்த்தி செய்திட நாடுங்கள்

# SOPIGA
## Jewells




3, RUE EUGENE SUE

75018 PARIS.

M: MARCADET POISSONIERE / JULES-JOFFRIN

TEL: 42 64 88 54

படிப்பகம்

www.padippakam.com


GAYATHIRY
S.A.R.L

IMPORT - EXPORT PRODUITS EXOTIQUES

லீலா தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்கள்
இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும்
தருவிக்கப்பட்ட தரமான உணவுப்பொருட்கள்
கொம்பக் டிஸ்குகள், தமிழ், சிங்கள, ஓடியோ வீடியோ
காசேட்டுக்கள் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.
மற்றும் இலங்கை இந்திய காய்கறிகள்
திங்கள், வியாழன் தினங்களிலும் - மீன், நண்டு, சுறா
இரால் உணவு வகைகளும் வாரம் தோறும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
ஒரே ஸ்தாபனம்





காயத்திரி

உங்களது தேவையே, எங்களது சேவை

GAYATHIRY
S.A.R.L

IMPORT - EXPORT PRODUITS EXOTIQUES

210, RUE du Fbg. St-DENIS, 75010 PARIS.

Tel: (1)42 09 22 43 Fax: (1)46 07 90 34


படிப்பகம்